பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News Paper

25 MAY 1999
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பொது நூலகம்
யாழ்ப்பாணம்
கல்லூர் வீதி

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு2030 வைகாசி 10 திங்கட்கிழமை (24-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 153

# இனப்பிரச்சினைத் தீர்வில் புலிகள் நிலைப்பாடு என்ன?

## இரத்தினபுரி ஆயர் இன்று ஜனாதிபதிக்கு விளக்குவார்

கொழும்பு, மே 24

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கும் நிலைப்பாடு என்ன என்பது தறிந்து இன்று ஜனாதிபதிக்கு இரத்தினபுரி ஆயர் அதிவண மல்கம் ரஞ்சித் எடுத்துக்கூறுவார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தத் தயார் என்றும்—

பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் விடுதலைப்புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்றும்—

கால அட்டவணைக்குள் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்றும்—

தம்மைச் சந்தித்த சர்வமதக் குழுவிடம் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் வன்னி சென்று புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய மன்னார் ஆயர் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து வந்துள்ளார் என்றும்—

இன்று ஜனாதிபதியுடன்

[12 ஆம் பக்கம் பார்க்க]

### கிளைமோர் மீட்பு

யாழ்ப்பாணம், மே 24

வரணி கரம்பைக் குறிச்சி என்னும் இடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 6மணிக்கு படையினர் தேடுதல் மேற்கொண்டனர்.

இந்தத் தேடுதலின்போது கிளைமோர் குண்டு ஒன்று கைப்பற்றப்பட்டதாக பலாலி படைத் தரப்பு அறிவித்துள்ளது. (இ-3)

## கடற்படையினரால் 77 தமிழ் அகதிகள் கைது!

### இந்தியா செல்ல முயன்றனர்

மன்னார், மே 24

விடத்தல்தீவில் இருந்து படகு மூலம் இராமேஸ்வரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த 77 தமிழ் அகதிகள் இலங்கைக் கடற்படையினரிடம் சிக்கினர்.

தமிழகத்தில் தஞ்சம் அடைவதற்காக 25 பெண்களும் 11 சிறுவர்களும் அடங்கிய இவர்கள் விடத்தல்தீவில் இருந்து புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்த சமயம் வழியில் இவர்களை வழிமறித்த படையினர் இவர்களைக் கைது செய்தனர்.

தலைமன்னாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-3-ரீ)

## மேலும் ஒருதொகுதி பயணிகள் திருமலைக்கு

யாழ்ப்பாணம், மே 24

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு 'லங்கா முடித்த' கப்பல் மூலம் நாளை ஒருதொகுதி பயணிகள் அழைத்துச் செல்லப்படவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இக்கப்பலில் பயணம் செய்யவிருக்கும் பயணிகள் இன்று காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் —

கப்பலில் பயணம் செய்ய ரிக்கெட் பெற்றவர்கள் பயண ஏற்பாடுகளுடன் இன்று பிற்பகல் 12-30 மணிக்குப் பின் யாழ். சிவில் நிர்வாக அலு

[12 ஆம் பக்கம் பார்க்க]

### மடு முகாமில் தங்கியிருந்த

## அகதிகளில் அரைவாசிப் பேர் சொந்த இடங்களில் குடியமர்வு

மன்னார், மே 24

மடுத்தேவாலயப் பகுதியில் அமைந்துள்ள அகதிமுகாமில் தங்கியிருந்த 7 ஆயிரம் அகதிகளில் அரைவாசிப்பேர் அவர்களது பிரதேசங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று மன்னார் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்கு தங்கியிருந்தவர்களில் 300 பேர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும்—

எஞ்சியோர் அவர்களது வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இந்த முகாமில் தங்கியுள்ள சகலரும் இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு விடுவர் என்றும் —

அதன்பின்னர் அந்த முகாம் மூடப்பட்டுவிடும் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

## மேஜர் ஜெனரல் பலகல்ல பதில் இராணுவத் தளபதி

கொழும்பு, மே 24

இராணுவப் பிரதம அதிகாரியும் வன்னிப் படைகளின் தளபதியுமான மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல பதில் இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியா பாங்ஹொக்குக்கு கடந்த வியாழக்கிழமை பயணமாகியதை அடுத்தே பலகல்ல பதில் இராணுவத் தளபதியாகக் கடந்த வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த புதன்கிழமை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியாவின் தலைமையில் நடந்த உயர் மட்ட மாநாட்டில்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## கதிர்காமரின் தென் கிழக்கு ஆசிய விஜயம்

கொழும்பு, மே 24

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை முறியடிக்க வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ராஜதந்திர விஜயம் மேற்கொண்டுள்ளார் என கொழும்பு செய்திவட்டாரங்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## ஈ. பி. டி. பி யைச் சேர்ந்த தம்பதியர் மீது தாக்கு!

### புளொட் மீது குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மே 24

மட்டக்களப்பு புதுநகரில் ஈ. பி. டி. பி அமைப்பின் உறுப்பினரும், அவரது மனைவியும் நேற்றுமாலை வழிமறித்துத் தாக்கப்பட்டனர் என்று மட்டக்களப்புப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிறந்தநாள் ஒன்றுக்கு தாம் தமது மனைவியான சந்திரகலாவுடன் சென்று கொண்டிருந்த சமயம் 'புளொட்' அமைப்பைச் சேர்ந்தவர்களால் தாம் வழிமறிக்கப்பட்டதாகவும்—

பின்னர் பொதுமக்கள் முன்னிலையில் வைத்துத் தாம் தாக்கப்பட்டதாகவும், ஈ. பி. டி. பி. உறுப்பினரான கணபதிப்பிள்ளை பேரின்பராஜா பொலீஸில் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இருவரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான கணபதிப்பிள்ளை பேரின்பராஜா முன்னர் புளொட் அமைப்பிலிருந்தவர் என்று பொலீஸார் தெரிவித்தனர். [இ-21-3]

## வன்னிக்கு உணவு லொறிகள்

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்கு நாளை மறுதினம் முதல்தினமும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல கிளிநொச்சி லொறி உரிமையாளர் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையின்றி விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் உணவு லொறி

[12 ஆம் பக்கம் பார்க்க]

## இயக்கச்சிப் பகுதியில் கிரனேட் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 24

இயக்கச்சிப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் கிரனேட் தாக்குதல் நடத்தியதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும்—

பதில் தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவரின் சடலம் கைப்பற்றப்பட்டதாகவும் — படைத்தரப்பு மேலும் தெரிவித்தது. (இ-3)

## பொலீஸ் காவல் நிலைமீது புலிகள் ஷெல் தாக்கு!

வவுனியா, மே 24

செட்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பொலீஸாரின் காவல் நிலை மீது நேற்று நண்பகல் 12. 45 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

பதினைந்து நிமிடம் நீடித்த இந்தத் தாக்குதலில் 3 பொலீஸார் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து தந்திரிமலையில் இருந்து வந்த படையினர் செட்டிக்குளத்தில் இருந்து விடுதலைப்புலிகளின் பகுதிநோக்கிப் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் காரணமாக மன்னாருக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. (இ-3)

## படையினரின் சேமநலன் கவனிக்க தனிப் பிரிவு

### விரைவில் சட்டமூலம்

கொழும்பு, மே 24

போர்முனையில் பணிபுரியும் படையினரின் சேமநலன்களைக் கவனிக்க தனியான அமைப்பு ஒன்றை உருவாக்கும் சட்டமூலம் ஒன்று விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு

[12 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## நீதிவான் உத்தரவு

வவுனியா, மே 24

மடு அகதிமுகாம் சுற்றாடலில் வைத்து எவராவது படையினரால் கைது செய்யப்பட்டால் அவர்கள் பற்றிய விவரங்களை உடனடியாகத் தமக்கு அறிவிக்க வேண்டுமென மன்னார் மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் மன்னார் மாவட்ட இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

நீதிவானின் உத்தரவுக்கு இணங்க மேற்படி சுற்றாடலில் எவராவது கைது செய்யப்பட்டால் உடனடியாக நீதிவானுக்கு அறிவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5-7)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சறோசா பாலசுந்தரம்

கொம்மந்தறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சறோசா பாலசுந்தரம் நேற்று (23-05-99) காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-05-99) காலை 11-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மயிலியதனை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
து. பாலசுந்தரம் (கணவர்)
(நாவற்குழி)
அதிபர், யா/கைதடி
விக்னேஸ்வர வித்தியாலயம், கைதடி.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

(66022)

### திருமதி சிவனேஸ்வரி சிவசுப்பிரமணியம்

யாழ். வண்ணார்பண்ணை, கேசாவில் வீதி இல: 3/1 'ருக்மணி' இல்லத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி சிவனேஸ்வரி சிவசுப்பிரமணியம் வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மாவிட்டபுரம் மடத்தடியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், ஷோபிகா, ரிஷிகேசவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சின்னத்தம்பி என்றழைக்கப்பட்ட காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் சுப்பிரமணியம் (இந்தியா), சத்தியபாமா (பிரான்ஸ்), இராமகிருஷ்ணர் (கனடா), சிவகுமார் (கனடா), விக்கினேஸ்வரி (பிரான்ஸ்), சிவனேஸ்வரன் (பிரான்ஸ்), லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசைச்சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25-5-99) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி V. சுப்பிரமணியம்

(66011)

### தம்பிப்பிள்ளை கனகரெட்ணம் (P. T. K)

(உரிமையாளர் P.T K. Ratnam Company Colombo and Jaffna)

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 605, கே.கே.எஸ். வீதியில் வசித்தவரும் தற்போது கொழும்பு 64-2/33 இல் வசித்தவருமாகிய தம்பிப்பிள்ளை கனகரெட்ணம் அவர்கள் 22-05-1999 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை, செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான நாகலிங்கம், சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும், ஜீவராணி (கனடா), ஜீவரஞ்சினி (கனடா), அம்பிகாதேவி (கனடா), ஜஸோரதி (கனடா), செந்தில்ரூபன் (கொழும்பு), தருமரூபன் (கனடா), காலஞ்சென்ற ஜெயரூபி ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரநாதன் (கனடா), சிவநாதன் (கனடா) கௌரிகாந்தன் (கனடா), சிவராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரகாஷ், பிரதீபன், பிரதீகா, பிருந்தா, பிரவீண், பவித்ரா, நிவேத்தா, பிரணவன் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகேஸ்வரி (கனடா), கனகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற உலகநாதன், காலஞ்சென்ற இலட்சுமி, தம்பிராசா, காலஞ் சென்றவர்களான சண்முகம் (ரத்கம ஸ்ரோஸ், கொழும்பு) கனகரெட்ணம் மற்றும் தெய்வேந்திரன், காலஞ்சென்ற பரமசாமி, பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான ஐஸ்வரியம், துரைராசா மற்றும் மகேஸ்வரி, புனிதவதி, செல்வராணி, தனலெட்சுமி, மங்கையர்க்கரசி (கனடா) ஸ்ரீச்சந்திரன் (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று 24-05-1999 திங்கள் மாலை 5.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
நா. தெய்வேந்திரன்
(மைத்துனர்)

64-2/33 டாம் வீதி,
கொழும்பு;-12,
T. P. :-433461.

(66015)

## குடும்பஸ்தர் மீது கல் வீச்சு

நெல்லியடி, மே 24

வீட்டிலிருந்த குடும்பஸ்தரை வெளியே வருமாறு கூப்பிட்ட இனந்தெரியாத நபர்கள் அவர்மீது கற்களினால் எறிந்து விட்டு தலைமறைவானார்கள்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளி இரவு 8.30 மணியளவில் கரணவாய் மேற்கு சிவலி ஒடையில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த கற்கண்டு சௌந்தரராஜன் (வயது 38) என்பவரே கல் வீச்சினால் வலது கையில் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-109)

## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், மே 24

சண்டிலிப்பாயில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்—சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

சைக்கிளில் சென்றவரும், சண்டிலிப்பாயைச் சேர்ந்தவருமான ஆர். திலகலட்சுமி [வயது 51] என்பவரே காயமடைந்தவராவார் இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஐ-15]

## தறித்த மரத்தில் சிக்கிக் காயம்

யாழ்ப்பாணம், மே 24

தறித்து விழுந்திய வேப்பமரத்தினுள் அகப்பட்டு தறித்தவர்களில் ஒருவர் படுகாயமடைந்தார்.

அல்வாய் வடக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்துரை கோபாலகிருஷ்ணன் (வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் மந்திகை ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-15)


ராஜா
யாழ்ப்பாணம்.
விஜயகாந்த் -கௌதமி
விஜய் -யுவராணி
மற்றும் பலர் நடித்த
செந்தூரபாண்டி
10-30, 2-30
அடுத்த வெளியீடு:
நினைத்தேன் வந்தாய்
(சி/7615)

நாகம்ஸ்
சுன்னாகம்.
பிரபு - குஷ்பு
நடித்த
சின்னத்தம்பி
(இனிய பாடல்கள் நிறைந்தது)
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்) (66001)

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
கார்த்திக் - தேவயானி
நடித்த
நிலவேமுகம் காட்டு
(புதிய வெளியீடு)
காட்சிகள்; 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(65901)


## இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 24

இலங்கைத் தமிழர் சங்கத்தின் தூதுக்குழு ஒன்று யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளையை இன்று பிற்பகல் 3.30 மணிக்குச் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றது.

யாழ். கல்வி வலயத்தில் பணிபுரியும் அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படும் என்று சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார். (இ-3-6)

## அறநெறிப் பாடசாலை

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயத்தில் அறநெறிப் பாடசாலை ஒன்று கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-135)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். கல்வி வலயம் ஒன்றின் சங்கீத உதவிக் கல்விப்பணிப்பாளர் சங்கீதபூஷணம்

திரு. லயனல் திலகநாயகம் போல்

அவர்கள் இலங்கை அரசின் கலாச்சார அமைச்சினால் "கலாபூஷணம்" என்னும் விருதினைப்பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அவர் புகழ் திக்கனைத்தும் பரவ இறைபதம் வேண்டி இதய பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தென்மராட்சி இசை ஆசிரியர்களும்
ஆசிரிய ஆலோசகரும்

(66025)

நகைச்சுவைக் கதம்பம் வெளியாகின்றது
மூளாயூர் தி. தவம் மட்டுநகர் இ. பஞ்சாட்சரம்
வழங்கும்
சிரிப்போம் சிந்திப்போம்
[ஒலி நாடா சித்திரம்]

* வர்த்தக விளம்பரதாரர்களே!
அடுத்த வெளியீட்டில் உங்கள் விளம்பரங்களை இணைக்க,
* ஒலிப்பதிவு நிலைய உரிமையாளர்களே!
ஓடியோ மாஸ்ரர் பிரதியைப் பெற்றுக்கொள்ள

நாடவேண்டிய இடம்:—
றோயல் கோப்ப சென்ரர்
இல. 10 பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.
[65989]


## மரண அறிவித்தல்கள்

### செல்வி இராஜேஸ்வரி அருணகிரிநாதன்

காரைநகர் சடையாளியைப் பிறப்பிடமாகவும் இல. 39, பிரப்பங்குளம் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது மல்லாவியில் வசித்து வந்தவருமாகிய செல்வி இராஜேஸ்வரி அருணகிரிநாதன் 22—05—99 இல் மல்லாவியில் காலமானார்.

அன்னார் வே. அருணகிரிநாதன் சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, இராசம்மா, அம்பலவாணர், சின்னத்தங்கம் ஆகியோரின் பேர்த்தியும் சிவசுப்பிரமணியம், சிவபாக்கியம், சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் புனிதவதி, கலைமகள் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மல்லாவியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. சிதம்பரநாதன்
(சகோதரன்)

இல.105, வில்லூன்றிப்பிள்ளையார்கோயிலடி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(66020)

### ஆறுமுகம் இரத்தினசபாபதி

ஆறுகால்மடம் புது வீதியைப் பிறப்பிடமாகவும் தற்சமயம் கொழும்பில் வசித்தவருமான ஆறுமுகம் இரத்தினசபாபதி 99—05—21 வெள்ளிக்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பூரணத்தின் சகோதரரும் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக்கணவரும்சாந்தினி, உருத்திரபாலன் [சுவிஸ்], பிறேமபாலன் [சுவிஸ்], மோகனபாலன் [சுவிஸ்] ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகைபாலன் [ஜேர்மனி], மாலா, ராகினி, ராஜகுமாரி ஆகியோரின் மாமனாரும், ரமணன், சுபிகா, மதீஸன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. யோகேஸ்வரி
[மனைவி]

புதுறோட்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

[66023]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை சோனியாகாந்தி நாளை ஏற்பாரா?

## கட்சியினர் மத்தியில் தீவிர எதிர்பார்ப்பு

புதுடில்லி, மே 24

**காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை திருமதி சோனியா காந்தி நாளை மீண்டும் ஏற்றுக்கொள்வார் என்று கட்சி வட்டாரங்களில் தீவிர நம்பிக்கை நிலவுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.**

திருமதி சோனியாகாந்தியின் ராஜினாமாவை அடுத்து ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை குறித்து ஆராய அனைத்து இந்திய காங்கிரஸ் குழுவின் அவசர கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் கூட்டப்பட உள்ளது.

சோனியாவின் பதவி விலகலை வாபஸ் பெறச் செய்யும் நோக்குடன் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

இரண்டுமாத முன்னறிவித்தல் இன்றி அனைத்து இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் கூட்டப்படுவது குறிப்பிடத்தக்கது

இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு கட்சியின் செயற்குழு தனது சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரத்பவார், தாரிக் அன்வர் பி. ஏ. சங்மா ஆகியோரை கட்சியில் இருந்து நீக்கியமைக்கு இக் கூட்டம் அங்கீகாரம் அளிக்கவுள்ளது.

திருமதி சோனியாகாந்தி இக் கூட்டத்தில் கலந்து கொள்வார் என்றும்-

சில நிபந்தனைகளுடன் கட்சித் தலைவர் பதவியை மீண்டும் ஏற்றுக் கொள்ள அவர் இணங்குவார் என்றும்-

கட்சி வட்டாரங்களில் தீவிர எதிர்பார்ப்பு நிலவுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

[ஐ]



இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் முதல் ஆட்டம் 'லோட்ஸ்' மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாவதற்கு முன்னர் இங்கிலாந்து அணித் தலைவர் அலெக்ஸ் ஸ்ருவார்ட்டும் இலங்கை அணித் தலைவர் அர்ஜூனா ரணதுங்காவும் கை குலுக்கும் காட்சி. (ஐ-6)

## பாகிஸ்தானில் 700 பேரைக் காணவில்லை

இஸ்லாமாபத் மே 24

பாகிஸ்தானில் ஏற்பட்ட கடும் புயல் மற்றும் வெள்ளப்பெருக்கினால் இரு நூறு பேர் வரை இறந்துள்ளனர். எழுநூறு பேர் வரை காணாமற்போயுள்ளனர் என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஜேராத்கடற் பகுதியில் மையம் கொண்டிருந்த புயற் காற்று பாகிஸ்தானை தாக்கியுள்ளது.

சிந்து மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை புயல் தாக்கியதை அடுத்து 50 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 3 ஆயிரம் பேர் வரை காணாமற்போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மீட்புப் பணிகளில் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விமானங்கள் மூலமாக உணவுப் பொட்டலங்களையும் அரசு போட்டு வருகிறது (ஐ-க)

## இந்தியத்தூதரின் இல்லம் சேதம்

பெல்கிரேட்டில் உள்ள இந்தியத் தூதுவரின் இல்லம் நேட்டோவின் தாக்குதலால் சேதமடைந்துள்ளது இதனை அடுத்து தூதுவர் தமது குடும்பத்துடன் ஹொட்டேல் ஒன்றில் தங்கியுள்ளார்.

இதே சமயம் இத் தாக்குதல் குறித்து இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

(ஐ-க)

## நாளை முதல் நடைபெறும் ஆட்டங்களின் விவரம்

லண்டன், மே 24

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதற்சுற்றில் நாளை முதல் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ மே 25 — இங்கிலாந்து எதிர் சிம்பாப்வே: [ரெடன்ட்பிரிட்ஜ்]

★ மே 26 — தென்ஆபிரிக்கா எதிர் கென்யா: [அம்ஸ்ரடாம்]

★ மே 26 — இலங்கை எதிர் இந்தியா. [டோடன்]

★ மே 27 — ஆஸ்திரேலியா எதிர் பங்களாதேஷ். [செஸ்ரர் — லீ — சென்]

★ மே 27 — மே இந்தியத்தீவுகள் எதிர் ஸ்கொட்லாந்து: [லீ செஸ்ரர்]

★ மே 28 — நியூஸிலாந்து எதிர் பாகிஸ்தான்: [டேர்பி]

★ மே 29 — சிம்பாப்வே எதிர் தெ. ஆபிரிக்கா: [சில்ம்ஸ் போர்ட்]

★ மே 29 — இங்கிலாந்து எதிர் இந்தியா. [எடஜ்பஸ்ரோன்]

★ மே 30 — இலங்கை எதிர் கென்யா. [சௌத்தம்டன்]

★ மே 30 — மே இந்தியத்தீவுகள் எதிர் ஆஸ்திரேலியா: [ஓல்ட்ரவோட்]

★ மே 31 — ஸ்கொட்லாந்து எதிர் நியூஸிலாந்து. [எடின்பேர்க்]

★ மே 31 — பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ்: [நோர்தம்டன்]

ஆரம்ப ஆட்டம் முதல் இன்று நடைபெறும் ஆட்டம் வரையான விவரம் கடந்த 14 ஆம் திகதி உதயனில் வெளியாகிஇருந்தது தெரிந்ததே. (ஐ-6)

# முன்னாள் சூடான் சர்வாதிகாரி எகிப்தை விட்டு நாடு திரும்பினார்

## 14 ஆண்டுகளின் பின்னர்

கார்ட்டூம், மே 24

சூடானின் முன்னாள் அதிபர் ஜோசெப் மிலேவி 14 ஆண்டுகால அஞ்ஞாதவாசத்தின் பின் மீண்டும கார்ட்டூம் திரும்பி உள்ளார்.

எகிப்தில் தங்கி வாழ்ந்த அவரை நாட்டுக்குத் திருப்பி அழைத்துவர சூடான் அரசு விசேட விமானம் ஒன்றை கெய்ரோவுக்கு அனுப்பிஇருந்தது.

10 வருட கால இராணுவ ஆட்சிக்குப்பிறகு சூடான் இஸ்லாமிய அரசு அங்கு பல கட்சிஆட்சிஅரசியல்முறையை நாட்டில் அனுமதித்துள்ளது.

இதனை அடுத்தே முன்னாள் அதிபர் நாடு திரும்பி உள்ளார்

1979 ஆம் ஆண்டு முதல் 85 ஆம் ஆண்டுவரை சூடானின் அதிபராக இருந்த ஜோசெப் மிலேவி 85 ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவப் புரட்சி மூலம் பதவி விழ்க்கப் பட்டார். அவரது ஆட்சியில் நடந்த அடக்குமுறைகளை எதிர்க்கட்சியினர் இன்னமும் மன்னிக்க வில்லை; அவர் நாடு திரும்புவதை எதிர்த்து பல எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

தனது எதிராளிகளை அழைத்து தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ள தற்போதைய சூடான் அரசு முடிவு செய்துள்ளது. இதனால் முன்னாள் அதிபருக்கு அங்கு பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-க)

## சியராலியோனில் பேச்சு ஆரம்பம்

பிரீரவுண், மே 24

சியராலியோனில் அரசுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையில் நாளை செவ்வாய்க்கிழமை சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாக உள்ளன

சியராலியோனில் நடைபெற்று வருகின்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முகமாக கடந்த செவ்வாய்க்கிழமை சியராலியோன் ஜனாதிபதி அஹமட் தெஜன் ஹபாவுக்கும் புரட்சிகர ஐக்கிய முன்னணிக்கிளர்ச்சித் தலைவர் பொடேஷன் கோவுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதனை அடுத்தே நாளை சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன

இதேவேளை —

இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையினை வரவேற்றுள்ள ஐ. நா. பொதுச் செயலர் கோபி அனான் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ஐ-க)


## பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் சோ. ஸ்ரீ வக்ஸன்

அச்சுவேலி தீர்த்தங்குளப் பிள்ளையார் கோவில் அர்ச்சகர்

**சோமசுந்தரம் ஐயா கவிதா தம்பதிகளின்**

செல்வப் புதல்வன்

ஸ்ரீ வக்ஸன் தனது முதலாவது பிறந்த நாளை (24-05-99) இன்று வதிரிஅம்பாள் வீதியிலுள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பம்மா, மனோகரன் சித்தப்பா, விஜிமாமி, இருபாலை அமுதன் மாமா, பவானி மாமி, மச்சாளமார் கவிதா, ஹம்ஸா அனைவரும் இருபாலை கற்பகப் பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

அமுதன் மாமா குடும்பத்தினர்

இருபாலை,
கோப்பாய்.

(66020)



## மரண அறிவித்தல்

### கந்தையா பாலசுப்பிரமணியம்

[முன்னாள் உத்தியோகத்தர், புகையிரத திணைக்களம்]

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் 21-05-99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், நாகம்மாவின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன், பாலகுமார், பாலகணேஷ், தேவிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஐயாத்துரை [முன்னாள் உத்தியோகத்தர் அரச, அச்சுத்திணைக்களம்], அமரர் கனகரத்தினம் [முன்னாள் உத்தியோகத்தர், புகையிரத திணைக்களம்], தவஈஸ்வரி, பரமேஸ்வரி, [ஆசிரியை யா/ தந்தை செல்வா தொ. நி. ப], இராசேஸ்வரி, சிவராசா [பிரான்ஸ்], சந்திரசேகரன் [சுகாதாரத் திணைக்களம், பூவரசங்குளம்], குணசேகரன் [அமெரிக்கா புளோறிடா] ஆகியோரின் சகோதரரும், சண்முகநாதன் [பிரான்ஸ்], மகேஸ்வரி, நல்லநாயகி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும், றொசாந், தினேஸ், ராகவி, பௌத்திரன், அஸ்ரியான், பிரவீன், ரம்மியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் நாளை (25—05—99 செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க. ஐயாத்துரை
[சகோதரர்]

220, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(66009)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

27/2, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பாபு துவாரகா என்பவரது விசேட அடையாள அட்டை 16 - 05 - 99 அன்று ஸ்ரான்லி வீதிக்கும், சிவப்பிரகாசம் வீதி வண்ணார்பண்ணைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரிக்கு ஒப்படைத்து உதவவும்.

(66002)

141. ஆடியபாதம் வீதி, கேணியடி திருநெல்வேலியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஜெசிந்தியா என்பவரது தேசிய அ: அட்டை (795332782V) விசேட அ: அட்டை (0902015858) இரண்டும் 22 - 5 - 99 இல் அம்மன் வீதி, திருநெல்வேலியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். (66013)

## விற்பனைக்கு

ஓட்டோ [இல. 2056263] ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு; நாகராசா காந்தி. சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(66000)

7 நாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 68, சட்டநாதர் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(65974)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும் 7 இல் செவ்வாய்க் குற்ற முள்ளவரும் 1969 - 3 - 9 பிறந்தவிசாகம் (3ஆம்பாதம்) நட்சத்திரத்தையுடையவரும் 5' உயரமும் மெல்லிய தோற்றமும் உடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும். இல. 885, மே / பா உதயன். (65992)

## பிறிமா குஞ்சுகள்

கொழும்பு Prima Hi - Line ஐந்து நாள் பேட்டுக்குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். (24 - 5 - 99) திங்கள் மாலை Hi - Line சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். அடுத்த விநியோகம் சமீபத்தில் இல்லை. வை. சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடிச்சந்தி. யாழ்ப்பாணம்.

(66012)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் ஆனைக்கோட்டை வீதியில் குளப்பிட்டிச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் சுமார் 4 பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. ந. விஸ்வலிங்கம் சட்டத்தரணி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

[65936]

கற்பகவிநாயகர் வீதி, பழைய கல்விக்கந்தோருக்கு அண்மையில் (ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாசாலை அருகில்) 1½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. பரராஜசிங்கம், 65, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(65979)

## வீடு விற்பனைக்கு

கச்சேரிக்கு அருகிலே கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள வீடு, வளவு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. பரராஜசிங்கம், 65, கச்சேரி. நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (65978)

---

மீண்டும் யாழ். நகரில்

## BEACON - [C. C. A. இல்]

## கலைப்பிரிவு A/L 2000, 2001

ஆரம்பம்: 29 - 05 - 1999 சனி

காலை 7. 30 மணி (ப நே)

**ஆசிரியர் குழு**

அளவையியல்- திரு S. S. மனோகரன்
தமிழ்- பிரபல ஆசிரியர்
இந்துநாகரிகம்- திரு. ஜோதீஸ்வரன்
நாடகமும் அரங்கியலும்- திரு. நிஷாந்தன்

குறிப்பு:- A/L99 மாணவர்களுக்கு கடந்த 20 வருட அளவையியல் வினாவிடை வகுப்புகள் நடைபெறும். அச்சடித்த குறிப்புக்களும் வழங்கப்படும்.

நிர்வாகி.

(66010)

---

## 10 ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 1938 - 09 - 06



இறப்பு 1989 - 05 - 24

## அமரர் கரல்ட் தேவராஜா

தண்ணீர்மேல் ஓவியம் போல்
தவிக்க வைத்துச் சென்ற பப்பா!
கண்ணீரையே காணிக்கையாக்கி
கடந்தாலும் பத்தாண்டு
பொன்னாக இவ்வஞ்சலியை
பொருத்துகின்றோம் இறைவனிடம்!
ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால்துயருறும்
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

120/3, சொலமன் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (65700)

---

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

தோற்றம் 16 - 02 - 1938



மறைவு 18 - 04 - 1999

அமரர்

## வே. நாகலிங்கம்

( நாகராஜா/ஜேசுதாசன் )
(ஓய்வுபெற்ற ஸ்ரீலங்கா கடற்படை படைசாரா ஊழியர்)

18 - 04 - 1999 அன்று விண்ணுலகெய்திய எமது குடும்பத்தலைவரின் ஆத்ம ஈடேற்றம் குறிக்கும் ஆராதனையும், மதியபோசனம் வழங்கும் நிகழ்வும் இன்று ( 24 - 05 - 99 ) காலை 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

**குடும்பத்தினர்.**

இல: 52, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (66008)

---

## ஓராண்டு நினைவலைகள்

திருமதி

## இங்கிருதமலர் பெஞ்சமின் போல்

அன்னையிடத்தில் 1943—12—17

கர்த்தரிடத்தில் 1998-05-24

கிறிஸ்துவின் வருகையின் முன் எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.

உங்கள் நினைவால் துயருறும்
**தம்பிமார், மைத்துனிமார், மருமக்கள்.**

சண்டிலிப்பாய்.

(66005)

---

## YOGI HOME SCIENCE ACADEMY

புதிய வகுப்புகள் 29 - 05 - 99 முதல் ஆரம்பமாகும்.

- இலகுவழித் தையல் (Cutting Classes)
- கேக் ஐசிங் (Birthday Cakes Wedding Structures)
- மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing and Sugar Craft)
- புதிய சமயல் முறைகள்
- பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும்
- துணியில் வர்ண அலங்கரிப்பு 7 வகுப்புக்கள் மட்டும் (Fabric Paintings)

### விசேட பயிற்சி நெறிகள்

**BASIC MAKE - UP AND HAIR DRESSING**
(அடிப்படை ஒப்பனையும், தலை அலங்காரங்களும்)

இதில் பாடக்குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள், சகல வைபவங்களுக்குமான முக ஒப்பனைகள், நவீன புதிய தலை அலங்காரங்கள், இந்திய சிங்கள, குஜராத்தி, மடிசார் போன்ற வித்தியாசமான சாறி அணியும் முறைகள். இந்த பயிற்சி நெறி 15 வகுப்புக்கள் மட்டும். இந்தப் பயிற்சி நெறி செய்பவர்களுக்கு மேலதிகமாக சில முக்கிய அழகுக் குறிப்புக்களும் வழங்கப்படும்.

★ முடிவில் செயன்முறைப் பரீட்சைகள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

**75, அம்மன் றோட், யாழ்ப்பாணம்.**
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
T. Phone: 2796 (65987)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணிலே மலர்ந்தது 07 - 01 - 1927



விண்ணிற்கு விரைந்தது 24 - 05 - 1996

அமரர்

## கந்தன் நல்லான் பற்றிக்

மூன்றாண்டு சென்றதப்பா உங்கள்
திருமுகம் கண்டு நாங்கள்
தந்தையாக நீரெமக்குக் கிடைத்ததனால்
மகிழ்ந்த எம்மை
தியாகச் சுடரதுவே உந்தனின்
திடீர் மரணம்
தீராத கவலையுடன் உழல்கின்றோம்
என் செய்வோம்
இயற்கையே மரணமென்று
இதயங்களைத் தேற்றிடுவோம்.

ஆத்மா சாந்திபெற ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நீங்கா நினைவில் வாடும்
**அன்பு மனைவி, பிள்ளைகள் மருமகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.**

புனித. சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய்.

(கி/7639)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முளையிலேயே கிள்ளாவிடில்...

ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்கள் இலங்கையில் குழப்பங்கள், வன்செயல்கள், இனக்கலவரங்கள் வெடித்து அழிவுகள் உண்டாகும் காலாண்டாக மாறுவதுண்டு.

இந்த வருடத்தின் மேற்கூறிய மாதங்களில் ஒன்றிலேனும் இனமோதல்கள், குழப்பங்கள், வன்யெல்கள் மூளுமோ என்ற ஒருவகைப் பயப் பிராந்தி கொழும்பு வாழ் தமிழர்கள் மத்தியில் பரவத் தொடங்குவதாகச் சொல்லப்படுகிறது.

''வீரவிதான'' என்ற சிங்களத் தீவிரவாத அமைப்பு கடந்த வாரம் கொழும்பில் நடத்திய ஊர்வலமும், அதில் எழுப்பப்பட்ட கோஷங்களும், தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளும்கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு ''கால் கோள்'' இடுவதாக அமைகின்றன.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே அவசியம்; விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தக் கூடாது என்று மட்டும் 'வீரவிதான' இயக்கத்தின் பிரமுகர்கள் கூறியிருந்தால்விரும்பத்தகாத நிகழ்வுகள் குறித்து தமிழர் மனங்கள் நினைக்கத் தோன்றாது.

கொழும்பிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் நான்கு லட்சம் தமிழர்கள் திட்டமிட்டுக் குடியமர்ந்துள்ளனர் என்பதும்—

தமிழர்களுடன் எவ்வகையான பொருளாதார நடவடிக்கையையும் சிங்களவர்கள் மேற்கொள்ளக் கூடாது என்பதும்—

இனத்துவேசத்தை விதைப்பது மட்டுமன்றி தமிழர்களுக்கு எதிரான உணர்ச்சியை சிங்களவரிடையே தூண்டுவதும் ஆகும்.

தமிழ் இனவாதிகளின் நோக்கம் வடக்கு — கிழக்கில் தனித்தமிழீழத்தை அமைப்பதல்ல; முழு இலங்கையையும் திராவிடஸ்தானாக மாற்றுவதே ஆகும் — என்ற விசமப் பிரசாரம் 1958, 1983 ஆம் ஆண்டு நிகழ்வுகளையே தப்பாமல் நினைவுக்குக் கொண்டு வரும்.

அவ்வேளைகளிலும் இத்தகைய இனவாதக் கருத்துக்களே, சிங்கள மக்களிடம் துவேச உணர்வுகளைத் தோற்றுவித்தன; தமிழர்களைப் பகைவர்களாகப்பார்க்க வைத்தன. கடந்த காலத்துக் கசப்பான நிகழ்வுகளுக்கு இத்தகைய பிரசாரங்களே காலாகவும் அமைந்தன.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வே தேவை என்ற கருத்து சிங்கள மக்களிடம் மேலோங்கி வரும் இவ்வேளையில், அதனைச் சகித்துக்கொள்ள முடியாமல் குழப்பிவிடும் முயற்சியில் பேரினவாத தீய சக்திகள் இறங்கியுள்ளன. இதற்கு அரசியல் இலாபம் கருதுவோரின் பின்புலம் இல்லாதிருக்க முடியாது.

இத்தகைய சக்திகளை முறியடிக்க, முளையிலேயே இள்ளிவிட, முன்னேற்பாட்டுடனும் எச்சரிக்கையுடனும் அரசு நடக்கவில்லை என்றால் அதன் ஆதரவும் உண்டு என்றாகிவிடும்.

# ஒய்வூதிய இலக்கம் வழங்கப்படாத நிலையில் மூத்த ஆசிரியர் சேவையில்!

## தாமதம் தருக்க ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 24

மிக அண்மையில் ஓய்வு பெறவிருக்கும் அதிபர்கள் ஆசிரியர்கள உட்பட பெருந்தொகையானோருக்கு இதுவரை ஒய்வூதிய இலக்கம் கிடைக்கவில்லை. இதனால் அவர்கள் ஒய்வூதியம் பெறுவதில் தேவையற்ற காலதாமதம் ஏற்பட வாய்ப்புண்டு எனவே இவர்களுக்கு ஒய்வூதிய இலக்கம் கிடைக்க நடவடிக்கை எடுப்பதுடன் ஆசிரிய பதிவிலக்கம் கிடைக்காதோருக்கு விரைவில் பதிவிலக்கம் கிடைக்க ஆவன செய்யவும்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளரிடம் கோரி உள்ளது.

சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் தலைமையிலான சங்கத்தின் தூதுக்குழு ஒன்று கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து இது குறித்துப் பேச்சு நடத்தியது.

அச்சந்திப்பின் போது சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் சில வருமாறு:-

★ கல்வி அமைச்சின் பிந்திய சுற்றறிக்கைக்கு அமைவாகப் பொதுவான ஆசிரிய இடமாற்றத்திட்டமொன்றை வகுத்துச் செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்வதோடு ஆசிரிய தொகையினைப் பாடசாலை ரீதியாகச் சமநிலைப் படுத்துவதோடு பின்தங்கிய பாடசாலைகளின் ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆவன செய்யவும்.

★ தொலைக் கல்விப் பயிற்சியை முடித்த ஆசிரியர்களிற் பலர் ஆசிரிய சேவைக்குள் இதுவரை உள்வாங்கப்பட்டு அவர்களுக்குரிய சம்பளம் வழங்கப்படவில்லை. அவர்களைக் கூடிய விரைவில் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கி உரிய சம்பளத்தை வழங்குவதோடுபாக்கிச் சம்பளத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கவும்.

★ இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து தற்காலிகமான கட்டடங்களில் இயங்கும் பல பாடசாலைகள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன. இப்பாடசாலைகளை அவற்றின் சொந்த இடத்திற்கு கொண்டுசெல்ல சம்பந்தப் பட்டவர்களோடு தொடர்பு கொண்டு ஆவன செய்யவும்,

★ 1984, 85, 89, 75 ஆகிய ஆண்டுக் காலப் பகுதியில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதம் வழங்கப்படாததினால் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதம் வழங்க ஆவன செய்யவும்.

★ சேவைக்காலப்பயிற்சி செயல் அமர்வு கருத்தரங்குகள் போன்றவற்றில் கலந்து கொண்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவுகளை காலம் தாழ்த்தாது உடன் வழங்கவும்.

ஆசிரியர்களுக்கான காப்புறுதித் திட்டத்தை அமுல்படுத்துதல், அரசாங்கம் மேற்படி கட்டாயகாப்புறுதித் திட்டத்தை 1997 இல் ஆரம்பித்துள்ளது. ஆனால் இத்திட்டம் வடபகுதி ஆசிரியர்களுக்கு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே எமது வலயத்தில் இதை நடைமுறைப் படுத்தும்படி பணிவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இடர்க்காலக் கொடுப்பனவு 1996!

எமது பிரிவிலுள்ள சில ஆசிரியர்கள் இடம் பெயர்ந்து வன்னியில் கடமையாற்றி 1997ஆம் ஆண்டு மீளக் குடியமர்ந்து எமது பிரிவில் சேவையாற்றுகிறார்கள். இவர்களுக்கான சம்பள நிலுவைப் பணம் முழுமையாககிடைத்தபோதிலும் 1996 ஆம் ஆண்டுக்கான இடர்க்கால கொடுப்பனவு இன்னும் வழங்கப் படாமலேயே உள்ளது. ஆனாலும் 1997 ஆம் ஆண்டுக்குரிய இடர்க்காலக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. எனவே இவர்களுக்கான 1996 ஆம் ஆண்டுக்குரிய இடர்க்காலக் கொடுப்பனவை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இக் கோரிக்கைகள் யாவும் முன்னுரிமைப்படுத்தப்பட்டு கூடியவிரைவில் தீர்த்து வைக்கப்படும் என வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் வ. இராசையா உறுதி மொழி வழங்கினார். கோரிக்கைகளில் சில ஏற்கனவே நிறைவேற்றியதற்காக அரசாங்கத்தின் தூதுக்குழுவினர் பணிப்பாளருக்குப் பாராட்டுத் தெரிவித்தனர்.

இப்பேச்சுவார்த்தையில் சங்கத்தின் சார்பில் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், நிதிச் செயலாளர் யே. யேசுதாசன், யாழ். மாவட்டச் செயலாளர் சி. தார் சீசியஸ், வட்டுக்கோட்டைக் இணைச் செயலாளர் அ. ஜெயகுமார், தெல்லிப்பழைக் கோட்ட இணைப்பாளர் செ. பி. இளமுருகனார், எஸ். தேவகுமார் ஆகியோரும், வலயத்தின் சார்பில் பணிப்பாளர் வ. இராசையா, நிர்வாக அதிகாரி ஏ. இ, சுப்பிரமணியம், கணக்காளர் கே. பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-க)

# சிமெந்துக் கட்டட வேலைகள் மணல் இன்றிப் பெரும் பாதிப்பு

## தொழிலாளர் வேலை இழப்பு

வடமராட்சி, மே 24

வடமராட்சிப் பிரதேசத்தில் மணல் அள்ளத்தடை விதிக்கப்பட்டுள்ளதால் வீடுகள், கட்டடங்களைக் கட்டுவோர் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மணல் இன்மையால் சிமெந்து கட்டடத்தொழிலாளர்களும் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர்,

இப்பிரதேசத்தில் முன்னர் ஒரு உழவு இயந்திர லோட் மணல் ஆயிரம் ரூபாவுக்குள்ளேயே விலை போனது தற்போது இரண்டாயிரம் ரூபாவுக்கு அதிகம் கொடுத்தும் மணலைப் பெறமுடியாதுள்ளது.

இதேநேரம் —

சட்டவிரோதமாக மணல் அள்ளுவோர் மீது படையினரும் பருத்தித்துறை பிரதேச சபையினரும் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

வீடுகளை, கட்டடங்களை புதிதாகக் கட்டுவோருக்கும் திருத்துவோருக்கும் மணல் வழங்குவதற்கான நடவடிக்கைகளில் பருத்தித்துறை மருதங்கேணி பிரதேச செயலகங்கள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை

மணல் தேவையானோர் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள கச்சயில் மணல் அள்ளுமாறு சில வாரங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அப் பகுதி மணல் அதீத உப்புத் தன்மை வாய்ந்ததால் அவை கட்டடங்கள், வீடுகள் கட்டுவதற்கு உறுதியாக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தி வேலைகளுக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலிருந்து பெர்மிட்டுக்கு மணல் வழங்கப்பட்டுள்ளது.

மணல் பெறமுடியாமையினால், வீடுகள், கட்டடங்களை புதிதாக கட்ட, திருத்த வென சிமெந்து, கற்கள் உட்பட கட்டட உபகரணங்களை வாங்கி வைத்துக்கொண்டு வடமராட்சியில் உள்ள பல குடியிருப்பாளர்கள் என்ன செய்வது எனப் புரியாமல் அங்கலாய்த்து வருகின்றனர்.

அத்துடன் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் தொழில் வாய்ப்புகளைப் பெற்றிருந்த சிமெந்து கட்டடத் தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பம் இருந்தும் மணல் இன்றி தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர்.

(ஐ-173)

## யாழ். பிரதேச பிரிவில்

# புதிய முத்திரைக்கான உணவு விநியோகம் இன்று ஆரம்பம்

அரியாலை, மே, 24

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்தோருக்கான 74, ஆவது 'ஏ' 'பி' முத்திரை புள்ளிக்குரிய உலர் உணவு விநியோகம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படும் என்று யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்கும் பொருட்டு சங்கத்தின் கிளைகளுக்குப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் —

யாழ். பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவையாளர் அலுவலகங்களில் வைத்து இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. உலர் உணவு முத்திரைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் கூட்டுறவுச் சங்க கிளைகளில் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17-111)

## வெள்ளோட்டம்

நல்லூர், மே 24

திருநெல்வேலி அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாஇன்று திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

[க-111]

### நாளை

வைகாசி 11

செவ்வாய்க்கிழமை

திதி: ஏகாதசி

பின்இரவு 5.37வரை.

நட்சத்திரம்: அத்தம்

முழுவதும்

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 10.22 - 11 52

ராகுகாலம்: 2.22 - 4.22

[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

### உதயவாக்கு

மனிதன் நடப்பதற்கு இரண்டு கால்கள் தேவைப்படுகின்றன. அதே போல் மனித வாழ்க்கைக்கு கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் தேவை.

-குன்றக்குடி அடிகளார்

# கிழக்கில் தமிழ் மாணவனைக் காணோம்!

வவுனியா, மே 24

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பகுதியில் தமிழ் மாணவன் ஒருவர் காணாமல் போய் விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மீராவோடையைச் சேர்ந்த இந்த மாணவன் கடந்த 18 ஆம் திகதி இறுதியாக காணப்பட்டார் என்றும் அன்று தொடக்கம் இவர் காணாமல் போய்விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடைசியாக காணப்பட்ட இடத்தில் அன்றைய தினம் படையினரின் நடமாட்டம் அதிகரித்து இருந்ததாகவும் இவரது பாடசாலைப் புத்தகங்கள் அங்கே சிதறிக் காணப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ-5-164)

## தாக்குதலில் காயம்

நெல்லியடி, மே 24

இரவு வேளை ஆலய உற்சவத்தில் கலந்து கொண்ட மினிபஸ் நடத்துனர் ஒருவர் இனந்தெரியாத சிலரினால் தாக்கப்பட்டு, மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த வெள்ளியன்று இரவு 8 30 மணியளவில் தும்பளை நெல்லண்டை ஆலயத்தில் இடம் பெற்றது.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சுந்தரம் விமலகாந்த் (வயது 23) என்பவரே தடிகளினால் தாக்கப்பட்டு, காயங்களுக்கு இலக்கானவராவார்

(ஐ-109)

## தீ மிதிப்பு

திருநெல்வேலி, மே 24

கந்தர்மடம் அரசடி வீதி செல்வநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் வைகாசி விசாக உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை விசேட பூசை, பொங்கல் ஆகியன நடைபெற்று பிற்பகல் 4 மணிக்கு தீ மிதிப்பு இடம்பெறவுள்ளது.

(ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோண்டாவில் மே...

# ஸ்ரீ சந்திரசேகரப் பி...

# புதிய சித்திரத்தே...

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஆசி

ஸ்ரீ மடம் ஸமஸ்தானம், சாலை தெரு, காஞ்சிபுரம்.

விக்ன ஹர்த்தாவாகி அக்ர பூசை பெற்று விளங்குபவர் ஸ்ரீ விநாயகர். இவர் பிள்ளையார் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். எளிய வழிபாட்டுமுறையுடன் ஷண்ம தங்களுள் ஒன்றாகிய காணா பத்யத்துக்கு முழுமுதற் பொருளாக விளங்குபவர்.

ஆலயங்களுள் நடக்கும் திருவிழாக்களுள் முக்கியமானதாகத் திகழ்வது தேர்த்திருவிழா. யாழ்ப்பாணத்திலுள்ள கோண்டாவில் மேற்கு என்னும் திருத்தலத்தில் ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் என்ற பெயரில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் இப்பெருமானுக்கு நூதனத் தேரமைத்து வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு மகிழ்கிறோம்.

ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையாரின் இன்னருளால் நிகழ்ச்சியாவும் பூரணமாக நிறைவேற ஆசிர்வதிக்கிறோம்.

ஸ்ரீ நாராயணஸ்மிருதி.

## தேர் உபயகாரர் வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையாருக்கு இன்று புதிய சித்தரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

'தேரினை இழுத்திடச் சீரான வாழ்வு' என்பார் பெரியோர்.

எம்பெருமானின் அருளினாலும் அடியார்களின் பங்களிப்பினால் பல அரிய கலைப்படைப்புக்களைக் கொண்ட அழகான சித்திரத் தேர் அமைந்ததையிட்டுப் பெருமையடைகின்றேன். இத்தேரினை அழகுற அமைக்க ஊக்கமாக இருந்த தேர்த் திருப்பணிச்சபையினருக்கும், அடியார்களுக்கும், இத்தேரினை சிறபபுற நிர்மாணித்த ஸ்தபதி மற்றும் ஏனைய சிற்பாசாரிமார்களுக்கும் எல்லாம்வல்ல விநாயகப்பெருமான் அருள்பாலிப்பாராக!

"தேர்த் திருப்பணி தெய்வீகத் திருப்பணி"

சி. சின்னத்துரை
(தேர்த்திருவிழா உபயகாரர்)

'கல்கி இல்லம்',
தாவடி வடக்கு, கொக்குவில்.
B.G.BROTHERS (PVT.) Ltd.,
B.G.BUILDING 110, 112,WOLFENDHAL STREET,
COLOMBO -13.

## அரசாங்க அதிபரின் செய்தி

சைவமணம் கமழும் கோண்டாவில் மேற்கில் வாழும் அடியார்கள சிறந்த சைவப்பற்றும் பக்தி நலனும் விளங்கப்பெற்றவர்கள்.

இவ்வடியார்களின் பக்தி சிரத்தையினால் தம் விநாயகனுக்கு புதிய சித்திரத்தேரை உருவாக்கி இன்று வெள்ளோட்ட விழா நடைபெறுகிறது.

இந்த சித்திரத்தேர் உருவாக்கத்தில் அர்ப்பணிப்பு சிந்தனையுடன் ஈடுபட்ட சிற்பாசாரியர்கள், தேர்த்திருப்பணிச் சபையினர், அடியார்கள், பங்காளர் அனைவருக்கும் விநாயகன் அருள் பாலிப்பாராக. சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

க. சண்முகநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

## அருளாசிச் செய்தி

விநாயகர் அடியார்களே!

கோண்டாவில் மேற்கில் சந்திரசேகர விநாயகராக எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு மனநிறைவடைகின்றோம். ஆலய விழாக்களில் முக்கிய இடத்தை வகிப்பது தேர்த் திருவிழா ஆகும். மக்களுடைய ஆணவ மலத்தை நீக்கி ஞானஒளியை ஏற்றுவது இறைவனுடைய திருவருள். அத்திருவருளைப் பெற்றுத்தருவது தேர்த்திருவிழா. தேரினுடைய அமைப்பு ஆழ்ந்து அகன்று கூர்மையாக இருப்பது உலக தத்துவத்தை விளக்குவதாகும். கீழ்ப்பாகம் பிரபஞ்சத்தையும் நடுப்பாகம் இருதய ஸ்தானத்தையும் மேற்பாகம் ஆகாய வெளியையும் காட்டுவதாக அமைந்துள்ளது. தேரில் பொறிக்கப்படும் சிற்பங்கள் யாவும் பூவுலகில் நடைபெறும் பிரபஞ்சத்தை எடுத்துக்காட்டுவதாகும். இத்தேரைப் படைக்கின்ற கலைஞர்களை தேவசிற்பிகள் என அழைப்பர். கலையிலே இறைவனைக் காண்பது நம் சமயம். அக்கலைப்படைப்புக்களை ஆலயங்களில் வளர்த்து எடுப்பது நம் அடையாளமாகும்.

விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமானுக்கு அமைந்திருக்கும் தேர் மனித வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக் கொள்வதாகும். இத்தேரைப் படைத்திருக்கும் சிற்பக்கலைஞர்களையும் தேர்த்திருப்பணிச் சபையினரையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,
2ஆவது குருமஹா சந்நிதானம்.

## தேவஸ்தான குருவின் ஆசி

கோண்டாவில் மேற்கில் உப்புமடம் என்கின்ற பதியில் செகராஜசேகரனால் பூசிக்கப்பட்டுவந்த ஸ்ரீ சந்திரசேகர விநாயகப்பெருமானின் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று. மஹோற்சவத்தில் முக்கிய விழா தேர்த்திருவிழா. இந்தத் தேரை உருவாக்க உதவி செய்த அடியார்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவிய அனைவருக்கும் தேர்த்திருப்பணிச் சபையினருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ சந்திரசேகரப்பெருமானின் கருணை என்றும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு அருட்கருணை அள்ளி வழங்க தேரேறி வரும் விநாயகப் பெருமானை வணங்குவோமாக! தேரேறி வரும் விநாயகப் பெருமானை அடியார்கள் உள்ளங்களிக்க, உடல் களிக்க உயிர்களிக்கப் பவனிவரும் எம்பெருமானின் அருட் காட்சியைக்கண்டு ஆனந்தமடைவோமாக. "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே" என்று இறும்பூதடைவோமாக எங்கள் உன்னத தேரிலும் எம் பெருமானை ஏற்றி வைத்து பக்தி மலர் தூவிப் பரவிப் பணிவோமாக!

"'சுபம் அஸ்து'

தேவஸ்தான குரு
சிவஸ்ரீ சாமி ச. சிறீஸ்கந்தராஜாக்குருக்கள்



## சமூக சமரசத்...

'கோயில் இல்லாத ஊரில் கு... ஆன்றோர் வாக்கு. சமூகத்தின் மத்திய ... - திகழ்பவை ஆலயங்களே.

கோண்டாவில் மேற்கிலே உப்புமடத்... யும் தமது வாழ்விடமாக வரிந்துக் கொண்... விளக்கமாக வழிகாட்டி நிற்பது கோண்ட... சேகரப் பிள்ளையார் கோயில். பல்வகை ... நம்மை ஒன்றாகப் பிணைத்து வைத்திருக்... சமூக மையம் இந்த ஆலயம்.

இங்குள்ள சைவ அன்பர்களின் கூ... காட்டாக மிளிர்வது இந்தப் புதிய சித்திர...

இந்த சித்திரத் தேரின் இன்றைய ... சமரச ஒருமைப்பாட்டுக்கு வழிகாட்டுவதா...

"உதயன்"
யாழ்ப்பாணம்.


வாழ்த்துகின்றோம்
S.ஸ்ரீஸ்கந்தராசா கிராமசேவையாளர்
கிராம முன்னேற்றச் சங்கம்,
வேதபாராயண சனசமூக நிலையம்,
மக்கள் முன்னேற்ற சனசமூகநிலையம்.

குமாரவேல் அன் கோ
217, 5ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு -11.
தொ.பே. 421057

விஜய பப்ளிஷிங்
கலையகம்
போட்டோ, வீடியோ
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.

நிரு கல்வி ...
புகையிரத நிலை...
கோண்டா...

AJANTHA REST INN
&
AJANTHA HOTELS LTD.
No.125, Olcott Mawatha. Colombo-11

NEW RAYAH STORES
No. 137, Kandy Road,
Mavannalla.

கணேசன் சென்ரர்
புடைவை, பான்சி பொருள்கள்
தாவடி வடக்கு,
கொக்குவில்.

க.பொன்...
உள்நாட்டு ...
தொலைத்தொட...
பெரியகடை,

SHALINKA REST INN
54/2-3, 1st. Cross Street,
Colombo-11.
T.P. 439452.

AUMRAMS TRADERS
GENERAL MERCHANTS
24, 4th Cross St. Colombo-11
T.P. No. 329891

S.V.S. COMPANY
DEALERS IN POULTRY ANIMAL
FEED AND FERTILIZER
65, Wolfendhal St. Colombo-13.
T.P. No. 432751, 328291.

ஈசன் கல்வி...
கே.கே.எஸ்...
கோண்டா...

விதுஜா சுப்ப மார்க்ற்
கே.கே.எஸ். வீதி,
இணுவில் சந்தி, இணுவில்.

B.G. BROTHERS (PVT.) LTD.
B.G. Building,
110, 112, Wolfendhal St.,
Colombo-13. T.P. 328729

S.R மகேந்திரன்
பல்பொருள் வாணிபம்,
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

LANKA PRODUC...
155/1, Dam Street,
T.P. 434...
வாழ்த்துபவர்: தம்பு ...

ஸ்ரீ சுஜீவன் ஜீவலறி
தங்க வைர நகை வியாபாரம்,
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

EXPO கொம்பிளெக்ஸ்
இல.7, கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.

ஐங்கரன் பந்தல் சேவை
காளி கோவிலடி,
கோண்டாவில் மேற்கு.

சித்திரா ...
246,பாங்சால்...
Bankshall Street, ...

கண்ணன்
அரைக்கும் ஆலை
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

ராஜா களஞ்சியம்
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்.

தேவா ஸ்ரோஸ்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு.

பாஷன் ...
45, கே.கே.எ...
யாழ்ப்பா...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மற்கு (உப்புமடம்)
# ள்ளையார் கோயில்
# தேர் வெள்ளோட்டம்



## தலைவரின் நெஞ்சத்திலிருந்து..

சைவமும், தமிழும், கல்வியும், செல்வமும் தழைத்தோங்கும் கோண்டாவிலில் மேற்குப்புறமாகப் பிரதான வீதியான உப்புமடச் சந்தியில் அமைந்திருக்கும் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையாருக்கு இன்று புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுகின்றது.

சித்திரத் தேர் அமையத் திருப்பணிக்கென மக்கள் அன்புடன் வாரிவழங்கும் அன்பளிப்பும் இச்சித்திரத்தேரில் எம் பெருமான் வீதியுலா வரும்போது பக்தியுடன் ஊர் மக்கள் அத்தேரினை இழுக்கும் செயல்கள் புண்ணியச் செயல்கள்.

21 அடி உயரம் கொண்ட இத்தேர் சைவசமய தத்துவங்களை வெளிப் படுத்தும் கலைப் பொக்கிஷங்களையும், தெய்வீக வரலாறுகளைச் சித்தரிக்கும் கலையம்சங்களையும் கொண்ட அழகான தேராக விளங்குகிறது.

மஹோற்சவ விழாவில் சிறப்பு வாய்ந்த தேர்த் திருவிழாவில் நிலைக்களனாக அமையும் இச்சித்திரத்தேர் உருவாக்கத்தின் சிற்பி ஸ்தபதி திரு. செ. பாலச் சந்திரனையும் அவருக்கு உறுதுணையாக இருந்த ஏனைய சிற்பாசிரியா களையும், அனைத்து வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த, உள்நாட் டிலும் வெளிநாட்டிலும் வதியும் விநாய அடியார்களும் இவ்வெள்ளோட்டசசிறப்பு மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும் இச்சிறப்பு இதழுக்கு உதவிய அனைத்து வர்த்தகப் பெரு மக்களுக்கும், 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தினருக்கும் சகல துறைகளிலும் என்னுடன் ஒத்தாசை புரிந்த தேர்த்திருப்பணிச் சபையின் சகல அங்கத்தவர் களுக்கும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் புதிய சித்திரத் தேரில்பவனி வந்து அருள்பாலிக்க வேண்டிநிற்கின்றேன்.

'தேரினை இழுத்து திருவருள் பெற்றே சீருடன் வாழ்வோம் செழித்து.'

**தம்பையா அரியரத்தினம்**
தலைவர்
தேர்த்திருப்பணிச் சபை.

## சித்திரத்தேர் சிற்பியின் சிறப்புச் செய்தி

கோண்டாவில் மேற்கின் பிரதான வீதியில் அமைந்திருக்கும் உப்புமடம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையாருக்கு எமது புத்தூர் ஸ்ரீ காளிகா சிற்பாலயத்தினால் சித்திரத்தேர் வடிவமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்டம் நடைபெறுவது எமக்கு பெருமகிழ்சியை அளிக்கின்றது. ஆலயப் பெருமைக்கு தேரின் சிறப்பு சான்று பகரும். தேரினமைப்புக்கள் சைவசமயத் தத்துவங்களை விளக்குகின்றனவாகவும் கலைச்சின்னமாகவும் விளங்குகின்றன.

இச் சித்திரத்தேரை உருவாக்க என்னுடன் ஒத்துழைத்த சிற்பக்கலைஞர் களுக்கும் தேர்த்திருப்பணிச்சபைத் தலைவர், மற்றைய உறுப்பினர்கள் மற்றும் கோண்டாவில் வாழ் அனைத்து அடியார்களுக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் சித்திரத்தேரில் ஏறி எல்லோருக்கும், எல்லா நலனுக்கும் அருள்பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**ஸ்தபதி விஸ்வப் பிரம்மஸ்ரீ**
**செ. பாலச்சந்திரன் ஆசாரியா**

ஸ்ரீ காளிகா சிற்பாலயம்,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

## ...த்தின் சின்னம்

... குடியிருக்க வேண்டாம்' என்பது நமது ...ய நிலையமாக - வழிபாட்டு மையமாக

...டத்தையும் அதை அண்டிய பகுதிகளை ...ாண்ட நம் சைவ மக்களுக்கு கலங்கரை ...ண்டாவில் மேற்கு உப்புமடம் ஸ்ரீ சந்திர ...கை சமூக வேறுபாடுகளுக்கும் அப்பால் ...ருக்கும் - மானுட ஒருமையைப் பேணும்-

... கூட்டு முயற்சிக்கு மற்றொரு எடுத்துக் ...த்திரத் தேர்.

...ய வெள்ளோட்ட நிகழ்வு நமது சமுதாய ...வதாக அமையட்டும்.

**ந. வித்தியாதரன்**
(பத்திரிகையாளர்)

## துர்க்காதுரந்தரியின் ஆசி

யாழ். குடாநாட்டில் அமைந்த திருக்கோயில்களில் இன்று குடமுழுக்கு விழாக்களும் மஹோற்சவ விழாக்களும் தேர் வெள்ளோட்ட விழாக்களும் மிகச் சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் நன்கு அறிகிறோம். எமது நலிந்த வாழ்வை வளமுறச் செய்வது வழிபாட்டு மார்க்கம் ஒன்றே என்பதை நன்கு அறிந்து கொள்வோம். இறைவன் ஒருவனே எமக்குத் தஞ்சமும் அமைதியும் அளிக்க வல்லவன் என்பது முற்றிலும் உண்மை. இந்த உண்மையைப் புரிந்து கொண்டமையினால் இன்று எமது ஆலயங்கள் தோறும் பெரும் பொருள் செலவு செய்து திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன.

மஹோற்சவத்தில் உன்னதமாகக் கருதப்படுவது இரதோற்சவமாகும். இதனை உணர்ந்த கோண்டாவில் மேற்கு பிள்ளையார் ஆலய அன்பர்கள் பெருமபொருள் செலவு செய்து சித்திரத் தேர் ஒன்றை உருவாக்கியுள்ளனர். பெருந்தெரு ஓரத்திலே அமைந்து விளங்கும் இவ்வாலயத்தின் உபயகாரர்கள் பெருமதிப் புக்கும் பண்பாட்டுக்கும் மேன்மைக்கும் உரியவர்கள். இவர்களின் பக்தி சிரத்தை யினால் இவ்வாலயம் மேலும் மேலும் சிறந்து விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சிற்பாசாரியர் உயர்திரு. பாலச்சந்திரன் அவர்கள் எங்கள் துர்க்காதேவி ஆலயத்தோடு நெருங்கிய ஈடுபாடு கொண்டவர். அன்னாரின் அற்புதப் படைப்பே இந்தச் சித்திரத்தேர் என்பதை நான் அறிந்து மிக மகிழ்ச்சியடைகிறேன். எனவே இந்த உன்னத பணியில் பங்கு கொண்ட அனைவரையும் வணங்கி வாழ்த்தி தேர் வெள்ளோட்ட விழாவை உள்ளத்தால் தரிசித்து உவகை அடைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா.

## பிரதேச செயலரிடமிருந்து..

சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் கோண்டாவில் மேற்கு கிராமத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையாருக்கு இன்று அவ்வூர் மக்களின் பங்களிப்பால் புதிய சிற்பத்தேர் உருவாகி வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

தன்னை வழிபடும் பக்தர்களுக்கு அளவில்லா ஆனந்தத்தைக் கொடுக்கும் விநாயகரின் தேவரத வெள்ளோட்டம் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

**சி. வேன்முருகோன்பிள்ளை,**
உதவி பிரதேச செயலர்,
நல்லூர்.

தேர் நிர்மாண அமைப்பு:-

**ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திரன் ஆசாரியார் குழுவினர்**

ஸ்ரீ காளிகா சிற்பாலயம்,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.


...வி நிலையம்
...நிலைய வீதி,
...ண்டாவில்.

விநாயகா தொழிற் பேட்டை
உப்புமடச் சந்தி, கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.

VIMAL CO (PVT.) LTD.
Dealers in Coconut Oil etc.
No: 1, Dam Street, Colombo-12.

கபிலா
SHOE PALACE
4, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

...வைத்துரை
...வெளிநாட்டு
...தொடர்பு நிலையம்.
... மன்னார்.

ராஜ்குமார் ரேடர்ஸ்
11/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

KALAIMATHYS STORES
41, St. John's Road,
Colombo-11.

ஆறுமுகம் புடைவைக்கடை
20, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

...விநிலையம்
...எஸ். வீதி,
...ண்டாவில்.

அற்புதா ரேடிங் கொம்பனி
98, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

SUBHA
RANI JEWELLERS
183, Sea Street, Colombo-11
T.P. 447255

பெட்டா எசன்ஸ்
விநியோகஸ்தர்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

...UCE AGENCIES
...eet, Colombo-12.
...434836
...ம்பு செல்வரத்தினம்.

அம்பாள் ரேடர்ஸ்
324, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

MALAVANS
24, 4th Cross Street, Colombo-11.
T.P. 327951

ஸ்ரீ விநாயகர் வைத்திய நிலையம்
Dr. K. சிவராசா B.S.M.S.
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
Regd. No.9391

...ரேடர்ஸ்
...சால் வீதி,
...et, Colombo-11.

வேணி
165, கே.கே.எஸ். வீதி,
யாழப்பாணம்.

LINGAMS
DEALERS IN TEXTILES
93, Main Street, Colombo-11.

துர்க்கா பலசரக்கு மாளிகை
உப்புமடம் சந்தி,
கோண்டாவில்.

...கவுஸ்
...க.எஸ். வீதி,
...பாணம்.

வசந்தம் பாமசி
456, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[illegible]
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெயலட்சுமி ஜுவலறி
தங்க நகை வியாபாரம்
470, கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத்தில் பயணம் செய்ய அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விமானம் மூலம் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் தொடர்ந்து உதயனில் வெளியிடப்பட்டு வருகின்றன.

இம் மாதம் 14 ஆம் திகதி வரை பாதுகாப்பு அனுமதி பெற்றவர்களில் — யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்—அனுமதி வழங்கப்பட்ட இறுதித் தொகுதியினரின் பெயர் விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

பெயர்களுக்கு அருகில் பதிவு இலக்கங்கள் உள்ளன.

ரி. டெஸ்லின் (512/094061/பி), கே. செல்வதுரை (512/094077/ஏ), எஸ்.டி. ஜெயசாந்தன் (512/094077/பி), பி. ரட்ணம் (512/094079/ஏ), ஆர். ஈ. வி. எவ். டானியல் (512/094092/ஏ), பி.நமசிவாயம் (512/094093/ஏ), எம். தவமணி (512/094098/ஏ), என். டி. ராசையா (512/094102/ஏ), கே. சண்முகம் (512/095816/ஏ): எம். துரைராஜா (512/094043/ஏ

எஸ். ராஜேந்திரன் (512/095955/பி), ரி. சர்மினி (512/093017/டி), ஜே. ராஜேந்திரன் (512/095955/ஏ), ரி. காந்தினி (512/098017/ஈ), வி. மரியநாயகம் (512/093019/ஏ), ஆர். மனோகரதேவி (512/093026/ஏ), ரி. சண்முகதாஸ் (512/102310/ஏ)) ஜே. ஸ்ரீதரன் (512/093027/ஏ), ஜே. சறோஜினிதேவி (512/093027/பி), ஏ. சோமபாலன் (512/093032/ஏ):

கே. சந்திரமலர் (512/093038/ஏ), ஏ. சுபாசினி (522/093040/ஏ), பி.மிலானி (512/093040/பி), வி. குணபாலன் (512/090415/ஏ), ஜி.இலங்கைராசன் (512/093944/ஏ), ரி. தனலெட்சுமி (512/098707/பி), ஆர். ராஜகுமார் (512/095955/ சி), ஐ. பாபு (512/093944/பி), எஸ். சிவலிங்கநாதன் (512/100334/ஏ), கே. கனகரட்ணம் (512/102332/ஏ):

ஆர். சிலீபன் (512/098731/ஏ), கே. ஆறுமுகம் (512/093946/ஏ), வி. ஜெதீஸன் (512/093968/ஏ), வி. மரூபி என். கணேசமூர்த்தி (512/093979/ஏ), எம். சண்முகம் (512/093982/ஏ), எம். கோயானஸ் (512/093995/ஏ), என். சண்முகலிங்கம் 512/100602/பி), சி. கொன்ஸ்மன் (512/093995/பி), எஸ். கணேசபூபதி (512/093041/ஏ), எம். ஏ. எவ். சேவியர் (512/094394/பி):

ரி. புனிதவாணி (512/094357/பி), எம். பிரபாகரன் (512/094357/ஏ), ஜே. பத்மநந்தன் (512/094280/ஏ), வை. பிரியானி (512/094280/பி), கே. பத்மநந்தன் (512/094294/ஏ), எஸ்.கே. ராமலிங்கம் (512/094328/ஏ), வை. நடராசா (512/094102/சி), எம். நிலோசன் (512/094098/பி), ரி. ஜெயந்தன் (512/094267/ஏ), கே. மார்க்கண்டு (512/094394/பி), ஏ. எஸ். கனகராசா (512/094276/ஏ),

ஆர்.சிவகுலரஞ்சினி (512/094401/ஏ), எஸ். ரதினம் (512/094401/பி), சூசைலாசரன் (512/094410/ஏ), பி.மகிசா),512/094423/ஏ), எச். ஆர். விஜயலக்சுமி (512/094426/ஏ), எஸ். எம் மித்தார். (512/094426/பி), சி. சிலுவைதாசன் (512/094427/ஏ), டி. கடகரன் (512/095062/சி), எஸ்.குணநாயகம் (512/ 094394/ஏ),

ஏ. கிறிஸ்ரி(512/ 094202/பி), ஆர். சாரங்கரி (512/094114/எவ்), எஸ். நடராசா (512/094117/ஏ), ரி. விஜயகுமார் (512/094143/ஏ), கே, நாகலிங்கம் (512/ 094161/பி), ரி. தர்மலிங்கம் (512/094165/ஏ), எம். திருநாவுக்கரசு (512/094181/ஏ), எஸ். கந்தையா (512/094200/ஏ), ஆர். சிறீகாந்தா (512/094201/ஏ) பி. எம். அருள்நந்தன் (512/ 094201/ஏ), பி. நிர்மலாசெல்வம் (512/094249/ஏ), எஸ். சிவராஜகுமார், (512/094220/ஏ) எஸ், தேவமனோகரன் (512/094224ஏ), கே. தேவராஜ் (512/094248/ஏ), பி.மாலைதாரை (512/094228/பி), பி.எஸ். ஐயர் (512/094228/ஏ) எம். சுதர்ஸன் (512/094222/பி), (ஐ-6-ரி)

## மாதாந்த விஞ்ஞானக் கருத்தரங்கு

நல்லூர், மே. 24

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூய விஞ்ஞானப் பிரிவினரால் ஒழுங்கு படுத்தப்பட்ட வைகாசி மாதக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க் கிழமைபிற் பகல் 1 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகத்துறை மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி. ஸ்ரீ சற்குணராஜா 'சிக்குண்ட தொனி' (Trapped Modes) என்னும் பொருளில் உரையாற்றுவார். (ஐ-103-73)

## மானிப்பாய்ப் பிரிவில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 24

மானிப்பாய் பொதுச் சுகாதாரப் பணிமனை பிரிவினுள் அடங்கும்ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய்த் தடுப்பூசி மருந்து இன்று திங்கட் கிழமை முதல் ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களும் நேரங்களும் பின்வருமாறு:-

### ஆனைக்கோட்டை

★ 24 - 05 - 99 — 8.30 — 9.45 உயரப்புலம் ஆலடி வைரவர் கோயில், 10.00—11.00 குணபாலன் பாடசாலைஅருகில்,11.15—12.15 ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை அருகில், 12.30 — 1.15 ஆரம்ப சுகாதார நிலையம், 1.30—2.30 மூத்தவிநாயகர் ச. ச, நிலையம், 2.45—3.15 திருவள்ளுவர் ச. ச. நிலையம்.

★ 26 - 05 - 99 — 8.30—10.00 நவாலி வை. எம். சி. ஏ., 10.15 — 11.15 நவாலி தெற்கு அ. மி. த. க. பாடசாலை அருகில், 11.30—12.30 கொத்துக்கட்டி ப. நோ. கூ. ச. கிளை அருகில், 12.45 — 1.30 அரசடிச் சந்தி, 1.45 — 2 30 நவாலிச் சந்தி.

★ 27 - 05 - 99 — 8. 30 — 10. 00 நவாலி வடக்கு ச. ச நிலையம். 10. 15 — 11. 15 புலவர் முகாம், 11 30 — 1. 00 மணிமண்டபம், 1.15- 2. 30 சென் பீற்றர் தேவாலயம் அருகில்.

★ 2 - 06 - 99 — 8.30 — 9.15 கெல்லாவில் ச. ச. நிலையம், 9. 30 — 10. 15 சாவல் காட்டு ச. ச. நிலையம், 10.30 — 11. 15 எச்சாட்டி அம்மன் கோயிலடி, 12. 30— 1. 15 சுதுமலை அம்மன் கோயிலடி, 1. 30 — 2. 15 சுதுமலை கிழக்கு ச.ச. நிலையம், 2. 80 — 3.00 செல்லத்துரை பாடசாலை அருகில், 3. 15 — 3. 45 சிந்மயபாரதி பாடசாலை அருகில்.

### பண்டத்தரிப்பு

★ 03 - 06 - 99 — 8. 30 - 9. 45 பிரான்பற்று முருகன் கோயிலடி, 10. 00 - 11. 00 பற்றிமா கோயிலடி, 11:15- 12. 15 சாந்தை ச. ச. நிலையம், 12. 30 — 1. 15 சில்லாலை தேவாலயம் அருகில், 1.30 — 2.30 அரசடிச் சந்தி ச.ச. நிலையம்.

★ 07 - 06 - 99 — 8. 30 — 9.45மாதகல் சென். செபஸ்தியார் தேவாலயம் அருகில். 10. 00 — 10. 45 மாதகல் இந்து இளைஞர் மன்றம், 11.00 — 12.00 காஞ்சிபுரம் 12. 15 — 1. 00 சகாயபுரம், 1.15 — 2. 00 இளவாலை சென்யூட், 2.15 — 2.45 இளவாலை ம. ம. (ஐ-க)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 24

உரும்பிராய் காட்டு வைரவர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து விசேட பூசைகளும் அன்னதானமும் இடம்பெறும். [க-30]

★ ★ ★

சுன்னாகம் மயிலணி திக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயிலின் ருடாந்த மஹோற்சவம் கடந் 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். [க]

★ ★ ★

செம்பியன்பற்று புனித பிலிப்நேரியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை செவ்வாய்க்கிழமை நற்கருணை விழாவும் மறுநாள் காலை 7. 30 மணிக்கு திருவிழா திருப்பலியும் இடம் பெறும். [க-30]

★ ★ ★

கொழும்புத்துறை, மே 24

சரித்திரப் பிரசித்த பெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தின் வருடாந்த கும்பாபிஷேகத்தின் மணவாளக்கோலத் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

காலை 9 மணிக்கு ஸ்னாபிஷேகமும், விசேட பூசையும் மாலை 4. 30 மணிக்கு மணவாளக்கோலத் திருவிழாவும், திருஊஞ்சலும், இடம் பெறும். (க-30)

யாழ்ப்பாணம். மே 24

கண்டுக்குளி மருதடி எழும் பிள்ளையார் கோயில் மண்டலாபிஷேகத் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

பொலிகண்டி உப்புக்கிணற்றடி இருப்பை மூலை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மாஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-173)

★ ★ ★

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலய கும்பாபிஷேக தினத்தை ஒட்டிய மணவாளக்கோல விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (க)

## சுயதொழில் முயற்சி கடன் வழங்குமாறு கோரிக்கை

சில்லாலைப்பகுதியில் உள்ள மக்களுக்கு ஆடு, மாடு வளர்ப்பு, கோழிவளர்ப்பு, வயல் இயந்திரம் கொள்வனவு செய்தல் ஆகிய வற்றுக்கும் மற்றும் பொருத்தமான சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் சுயதொழில் முயற்சிக் கடன் பெறுவதற்கு ஆவன செய்து தருமாறு சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம் சண்டிலிப்பாய் பிரதேசசெயலருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

கடந்த கால அனர்த்தங்களின் போது காணாமற் போன இச்சங்கத்தின் தளபாடங்கள் மற்றும் பொருள்களை மீண்டும் பெறுவதற்கு தேவையான நிதியை, அல்லது நஷ்ட ஈட்டினை வழங்குவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்; நீண்ட காலமாக திருத்தப்படாது மக்கள் போக்கு வரத்திற்கு மிகவும் சீர்கெட்டநிலையில் இருந்து வரும் சில்லாலை சுற்று வீதி என்றழைக்கப்படும் உந்துவத்தை வீதியை திருத்த வேண்டும். பலத்த சேதமடைந்த நிலையிலுள்ள சில்லாலை சம்பில்துறை வீதியைப் புனரமைப்புச் செய்ய வேண்டும். முன்னர் நடைபெற்று வந்த யாழ்ப்பாணம்–சில்லாலை 791 இலக்க பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்; சில்லாலைப் பகுதிக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் இம் மகஜரில் இடம் பெற்றுள்ளன. சங்கத்தின் செயலாளர் எம். மரியநாயகம் இம் மகஜரை கடந்தவாரம் அனுப்பிவைத்துள்ளார். (ஐ-135)

# சுகாதாரப் பரிசோதகரை உருவாக்கும் பயிற்சி நெறி வெற்றிகரமாகப் பூர்த்தி

குடாநாட்டில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவிக்கு நிலவிவந்த பற்றாக் குறையை நீக்க யாழ்ப்பாணத்தில் அந்தப் பதவிக்காக நடத்தப்பட்டு வந்த பயிற்சி நெறி வெற்றியளித்துள்ளது.

இந்தப் பயிற்சி மூலம் 44 பேர் சுகாதாரப் பரிசோதகர்களாக வெளியேறியுள்ளனர். இவர்கள் மூலம் குடாநாட்டில்சுகாதாரச்சேவைக்கு புத்தூக்கம் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

இதுவரை காலமும் இந்தப் பயிற்சி நெறி களுத்துறையில் மட்டுமே நடைபெற்று வந்தது. அதுவும் சிங்கள மொழி மூலமே நடைபெறுவதால் தமிழர் தமது பயிற்சியை மேறகொள்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்கி வந்தனர்.

முதல்தடவையாக யாழ்ப்பாணத்தில் இந்தப் பயிற்சியை அளிக்கும் நிலையத்தை அமைக்க அரசாங்கம் 1997 ஆம் ஆண்டு அனுமதி வழங்கியது.

இந்தப் பயிற்சி நெறியை யாழ்ப்பாணத்தில் நடத்தப் போதிய ஆளணி இல்லை என்றும், போதிக வளங்கள் இல்லை என்றும் தென் இலங்கையில் கருத்து நிலவியது. இந்தக் கருத்தை மறுத்துரைத்துத் தொடர்ந்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பி. சிவபாதம் போராடிய தன் பயனாக இந்த நிலையம் இங்கு அமைந்தது.

குடாநாட்டில் உள்ள ஆளணி மற்றும் வளங்களைக் கொண்டு இந்தப் பயிற்சிநெறி வெற்றிகரமாக நிறைவேறியதுடன் 44 சுகாதாரப் பரிசோதகர்களை இந்த மண்ணுக்கு அளித்துள்ளது.

வைத்திய கலாநிதி பி. சிவபாதத்தின் மேற்பார்வையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி நெறியில் பிராந்திய சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். இராஜேந்திரா இணைப்பாளராக இருந்து சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

அவருடன் இணைந்து பயிற்சி நெறி சிறப்புடன் வெற்றிபெற தனது பங்களிப்பைப் பிராந்திய உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர் ரீ. மகாதேவன் ஆற்றியுள்ளார்.

இந்தப் பயிற்சிநெறி வெற்றிகரமாக நிறைவுபெற யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமூக மருத்துவத்துறையினரும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியும் வழங்கிய பங்களிப்பை நாம் மறவோம்.

யாழ்ப்பாணத்தில் நடந்த பயிற்சிநெறி தமிழில் நடத்தப்பட்டதால் நாம் சிறப்புற பயிற்சியைப்பெற முடிந்தது. இந்தப் பயிற்சிநெறி தொடர்ந்து நடைபெற்று மேலும் பலரை உருவாக்க உதவவேண்டும்.

**யாழ். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிலுநர்கள் நலன்புரிச் சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு புனரமைப்புக்கான 2 ஆம் கட்ட

# கொடுப்பனவு வழங்குவது தாமதம்

வலி.மேற்கு, மே 24

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு — வீடுகளைத் திருத்தத் தொடங்கி ஐந்து மாதங்களாகியும்—இதுவரை வழங்கப்படவில்லை. வீடுகளைத் திருத்தியமைத்தவர்கள் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு எப்போது வழங்கப்படுமெனக் கேட்டு கிராம உத்தியோகத்தர்களிடம் அலைந்துதிரிகின்றனர்.

பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 25 ஆயிரம் ரூபா நன்கொடை வழங்குவதற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராமஉத்தியோகத்தர் பிரிவிலும்இருந்து சுமார் ஆயிரத்து 400 வீடுகள தெரிவுசெய்யப்பட்டு முதலாம் கட்டக்கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப் பட்டது.

முதலாம் கட்டக் கொடுப்பனவு வழங்கி மூன்று மாதங்களுக்குள் வீடுகளைத் திருத்தியமைத்து இரண்டாம் கட்ட கொடுபபனவாக 8 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வீட்டு உரிமையாளர்களிடம் வேண்டுகோள் விடப்பட்டது. ஆனால் தாம்வீடுகளை திருத்தியமைத்து ஐந்துமாதங்களாகியும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ஐ-175)

## சிறைச்சாலைக் காவலர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 24

அமையச் சிறைச்சாலைக் காவலர்கள் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை மறுதினம் புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பரீடசைகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

26 ஆம் திகதி புதன்கிழமை ஆண்களுக்கான நேர்முகப் பரீட்சையும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பெண்களுக்கான நேர்முகப் பரீட்சையும் நடைபெறவுள்ளதாகத் தற்போது தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-ரி)

## நினைவு தின விழா

காரைநகர், மே 24

கலாநிதி ஆ. தியாகராசாவின் நினைவுதின விழா காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடராசா மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் கல்லூரி அதிபர் பண்டிதர் மு க. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந. பரமசிவம், யாழ்ப்பாணம் இலங்கை வங்கியாளர் சி. சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு நினைவுச் சொற்பொழிவு ஆற்றுவர். (க.73)

## வர்த்தகர் கடத்தப்பட்டார்

தென்மராட்சி, மே 24

சாவகச்சேரி நகரிப் பகுதி வர்த்தகர் ஒருவர் வெள்ளியன்று இரவு 7.15 மணிக்கு இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடை வியாபாரம் முடித்து வீடு சென்று குளித்துக் கொண்டிருந்த போது குளித்த உடையுடன் இவர் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி விமலாஸ் கடை உரிமையாளரான காராளர் நவரத்தினம் (வயது 54) என்பவரே கடத்தப்பட்டவராவார். (ஐ-117)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள்

வலிகாமம் தெற்கு, மே 24

வலிகாமம் கல்வி வலயத்தில் கடந்த 20 ஆம் திகதியிலிருந்து எழுபது பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர் முகப் பரீட்சைகள வலிகாமம் கல்வி வலய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. [[ஐ-152]

## அலுவலர்களுக்கு அ. அட்டை

வலிகாமம் தெற்கு. மே 24

புதிய திணைக்கள அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாத அலுவலர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் அவற்றைத்தயாரித்து வழங்குவதற்கேற்ற நடவடிக்கையை வலிகாமம் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் எஸ். வீரசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

அடையாள அட்டை தேவைப்படுவோர் உடனடியாகத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-152)

## வழிபாட்டுத் தலங்களின் புனரமைப்புக்கு நிதி

யாழ்ப்பாணத்தில் தேவாலயங்களையும் பள்ளிவாசல்களையும் உள்ளடக்கி 31 வழிபாட்டுத்தலங்களின் புனரமைப்புக்கு 50 லட்சத்து 75 ஆயிரம் ரூபா வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இந்நிதியுடன் மேலும் 32 இலட்சம் ரூபா யாழ் நாகவிகாரைப் புனரமைப்புக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதி ஒதுக்கீட்டின்கீழ் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலுக்கு மின்பிறப்பாக்கி ஒன்றும் காரைநகர் சின் கோயில் புனரமைப்புக்கு இருபது லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வருட வரவு செலவுத திட்டததில் வழிபாட்டுத் தலங்களின் புனரமைப்புக்கு என மொத்தம் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (ஐ-5)

# கணனி யுகத்துக்கு தயாராகிவரும் மாணவருக்கு ஆங்கிலம் அவசியம்

## பரிசளிப்பு விழாவில் உரை

காரைநகர், மே 24

இருபத்தோராம் நூற்றாண்டின் கணனியுகத்திற்கு எம்மைத் தயாரிப் படுத்தத்தக்க வகையில் எதிர்காலத்தில் கல்விமுறை நடைமுறைப் படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். கணனித் துறையோடு தொடர்புபடும் நவீன கல்வித்திட்டத்திற்கு எதிர்காலத்தில் மாணவர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கு ஆங்கில அறிவு இன்றியமையாததாகும்.

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஸ்தாபகர் தின மற்றும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை தலைமையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இவ் விழாவில் ப. விக்கினேஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் எந்த ஒரு பாடசாலையிலும் இல்லாதவாறு இந்தப் பாடசாலையிலேயே போதியளவு ஆங்கில ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். அவர்களைப் பயன்படுத்தி எங்களுடைய மாணவர்கள் ஆங்கிலத்தில் புலமை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இக்கிராமத்தில் பிறந்து மருத்துவப் பொறியியல் துறைகளில் பட்டதாரிகளாக வருவோர் வெளியிடங்களிலும், பிறநாடுகளிலும் சேவையாற்றுகின்றனர். இந்நிலை மாற வேண்டும். இக்கல்லூரி ஸ்தாபகர் அமரர் சயம்பு அவர்கள் இந்த ஊரைச் சேர்ந்தவர் அல்லர்; அவர் நல்லூரிலே பிறந்து காரைநகருக்கு வந்து இப்பாடசாலையை ஆரம்பித்து கல்விச் சேவையைப் புரிந்தார். இத்தகைய மனப்பான்மை இன்றைய மக்களிடையே இல்லை; இந்நிலை மாற வேண்டும்—என்றார்.

பாடசாலை ஸ்தாபகர் அமரர் முத்து சயம்புவின் சேதமடைந்த சிலை புனரமைக்கப்பட்டு கல்விப்பணிப் பாளரினால் திறந்து வைக்கப்பட்டது.

ஸ்தாபகர் நினைவு உரையைப் பிரஜைகள் குழுத் தலைவர் க. கந்தையா நிகழ்த்தினார். பரிசில்களைத் திருமதி தவமணி விக்னேஸ்வரன் வழங்கினார்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன நன்றிஉரையை பழைய மாணவர் சங்கச் செயலாளர் அ. செல்வரத்தினம் நிகழ்த்தினார். (ஐ-73)

## கருத்தரங்கு

பழைய தெல்லிப்பழை, உடுவில் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலக்கருத்தரங்கு ஒன்றை வலிகாமம் கல்வி வலயத்தினர் நடத்த உள்ளனர்

எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மேற்படி கருத்தரங்கு நடைபெறும். (ஐ-152)

**மகாதேவா ஜோதிடம்**

27 - 05 - 1999 இல்

வியாழமாற்றம் புத்தகம் வெளிவந்து எங்கும் விற்பனையாகின்றது.

(சி/0001)

**பாராட்டுகின்றோம்**

யா/யூனியன் கல்லூரியில் பதினான்கு ஆண்டுகள் ஆசிரியராகவும், உப அதிபராகவும் இருந்து மிகவும் சிறப்பாகக் கடமையாற்றிய மதிப்புக்குரிய

**திருவாளர் சி. சுகுமாரன் அவர்கள்**

வலிகாமம் கல்விவலயத்திற்கு கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளமையைப் பாராட்டுவதுடன், அவரின் சேவை மேலும் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள்.

யா/யூனியன் கல்லூரி,

யா/ஜொன். பரமானந்தா ம. வித்தியாலயம்

[65966]

**மக்கள் வங்கி (வட வலயம்)**

**யாழ். பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம்**

இணைந்து நடத்தும்

**மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி - 99**

எம்மால் நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் (20 ஓவர்) மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி ஜூன் மாதம் ஆரம்பித்து நடைபெறவிருக்கின்றது. இப்போட்டிக்கு வங்கிகள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை விளையாட்டுக்கழக செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி 31 - 05 - 99**

**அணி ஒழுங்குத் தேர்வு:**

02 - 06 - 99 பிற்பகல் 3-00 மணியளவில்- தலைமைக் காரியாலயம் - கன்னாதிட்டி - யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

செயலாளர்

மக்கள் வங்கி


கன்னாதிட்டி யாழ்ப்பாணம்,

(சி/7635)

## ஓராண்டு நினைவஞ்சலி

நயினை மண்ணில்

08 — 08 — 1929



அப்பாள் திருவடியில்

04 — 06 — 1998

அமரர்

**ஆ. சி. பரமசாமி**

(பிரபல வெற்றிலை வியாபாரி பெரியகடை, யாழ்ப்பாணம்)

இன்றே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்

திதி: 24—05—1999

ஆண்டு வெகுதானி ஆனவைகா சிவியாழன்
பூண்ட தசமிதிதி பூர்வபக்க நீண்டபுகழ் (ச்)
சான்றோன் பரமசாமி கார்நாக பூஷணிதன்
ஆன்ற பதம்சென்றான் ஆர்.

ஓம் சாந்தி!

சிவன்பண்ணை வீதி,
கொட்டடி.

—குடும்பத்தினர்.

[65999]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்கானையில் 200 குடும்பங்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு கிடைக்கும்

வலி.மேற்கு, மே 24

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள 200 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அராலி மேற்கில் 138 குடும்பங்களுக்கும் —

அராலி தெற்கில் 20 குடும்பங்களுக்கும் —

வட்டுக்கிழக்கில் 13 குடும்பங்களுக்கும் —

சுளிபுரம் மேற்கில் 8 குடும்பங்களுக்கும் —

தொல்புரம் கிழக்கில் 7 குடும்பங்களுக்கும் —

தொல்புரம் மேற்கில் 5 குடும்பங்களுக்கும் —

வட்டுத் தெற்கில் 5 குடும்பங்களுக்கும் —

சங்கானை தெற்கில் 4 குடும்பங்களுக்கும் —

மொத்தமாக 200 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவினரால் மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவுக்குரிய காசோலை வங்கி ரீதியாக பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை பிரதேச செயலகத்தினால் வங்கிகளுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சங்கானை கிராமிய வங்கியிலேயே மிகக் கூடுதலான குடும்பங்கள் மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவைப் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது

(ஐ-175)

# தெல்லிப்பழையில் நாய்களுக்குத் தடுப்பூசி

சண்டிலிப்பாய், மே 24

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

அண்மையில் விசர்நாய்க் கடிக்கு இலக்கான அளவெட்டி வாசி ஒருவர் இறந்ததை அடுத்து அப்பகுதியில் நான்கு பேருக்கு விசர்நாய்க்கடிக்கான ஏ. ஆர். வி. எனப்படும் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளதாகவும் —

இப்பகுதியிலுள்ள கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருவதாகவும் —

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி எஸ். சதாசிவம் தெரிவித்தார்.

சுன்னாகம் சபாபதிப் பிள்ளை இடம்பெயர்ந்தோர் அகதி முகாமிலும் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வேளை —

இப்பிரிவில் வீடுகளில் வளர்க்கப்படும் வீட்டு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு ஊசி ஏற்றும் பணி அடுத்த மாதம் தொடக்கம் மேற்கொள்ளப்பட உள்ளது இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவ வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டது.

(ஐ-135)


## வாழ்த்துகின்றோம்

பொன்விழாக் காணும் துரை
[சாரதி — இ.போ.ச. பருத்தித்துறை]

24—05—99 இன்று 50 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் 'மக்கள் சேவையாளன்'

**கிட்டினன் அருமைத்துரை**

அவர்களைப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**மகாத்மா சனசமூக நிலையம்,**
**மகாத்மா அறவழி மழலைகள் கல்விப்பூங்கா,**
அல்வாய் வடக்கு.

(C/7644)

மக்கள் மனதில் தமக்கென
ஒரு நீங்காத இடம் பிடித்த

## வீடியோ கலா மினியின்

மற்றுமொரு சேவையாக

## தொலைத் தொடர்பு சேவையும்

ஆரம்பிக்கப்பட்டுள்ளது!

எம் வாடிக்கையாளர்களைப் பெருக்கும் நோக்குடன் **24 - 05 - 99** தொடக்கம் **27 - 08 - 99** வரை எமது ஸ்தாபனத்தில் பதிவு செய்து எடுக்கப்படும் அழைப்புகளுக்கு—உள்வரும் அழைப்புக்கள் யாவும் இலவசமாக வழங்கப்படும்.

மற்றும் எமது ஸ்தாபனத்தில் எடுக்கப்படும் உள்ளூர், வெளியூர் அழைப்புக்கள் யாவற்றிற்கும் குறைந்த கட்டணமே அறவிடப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வீடியோ கலாமினி**
**தொலைத் தொடர்பகம்**
அச்சுவேலி.

தொலைபேசி இல. 070 - 212431. [66016]

விரைவில் வெளிவருகிறது
க. பொ. த. உ/த
மாணவருக்கான

## பொருளியல் 1 பரீட்சை வழிகாட்டி

அலகு II இன்
மாதிரி வினா விடைகளை
உள்ளடக்கியது.

**A/L 99, 2000**

பரீட்சார்த்திக்கு
மிகவும் பயனுடையது.

ஆசிரியர்:
இ. ஞானேஸ்வரன்
B.A. [Econ] Dip. in. Ed

[66019]

உ

## கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் திருக்கோயிலில் இன்று 5ஆம் திருவிழா

(பூச்சப்பறம்)



ராகம்: தேஷ் தாளம்: ஆதி

பல்லவி

உருகி உருகி உன்னை உளமாரப் பாடினேன்
திருதிகழ் கோண்டாவில் தில்லையம்பதியாளே!
(உருகி உருகி)

அனுபல்லவி

பெருகிக் கண்ணீர் சொரிந்தே
பூம்பதம் நான் பிடித்தேன்
அருகில் வந்தே எனக்கு
ஆறுதல் கூறாயோ? (உருகி உருகி)

சரணம்

அம்மா அம்மா என்றே
அடியவன் கதறுகின்றேன்
இம்மா நிலத்தில் உந்தன்
இருசெவி கேட்கலையோ?
பெம்மான் சிவன் மருவும்
பேரின்ப நாயகியே!
அம்மாயன் சோதரியே!
அடைக்கலம் சிவகாமி
(உருகி உருகி)

காப்பதுன் பாரமம்மா
காசினியில் எனக்கு உந்தன்
பூப்பதம் அன்றி வேறு
புகலிடம் இல்லையம்மா
நாப்பழகும் தமிழில்
நல்லிசை பாடிடுவேன்
சீர்ப்பதம் தந்தருள்வாய்
சிவகாம சுந்தரியே.
(உருகி உருகி)

ஆக்கம்; அருட்கவிச் செம்மல்
**பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்**

பாடியவர்: **கலைமாமணி T. M. சௌந்திரராஜன்**

பி. ப. 3-00 மணிக்கு மங்கள இசை:
**இணுவையூர் சாமிநாதன் குழுவினர்**
**கோண்டாவில் கானமூர்த்தி குழுவினர்**
**இணுவையூர் கோவிந்தசாமியின் புதல்வர்கள்**
**நில்லூர் ரஜீபன் குழுவினர்**

பூச்சப்பறம் அமைப்பு: **இந்துதாசன் தாவடி**

இரவு 7-00 மணிக்கு தெய்வீகப் பேருரை:
நிகழ்த்துபவர்: **கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
(தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**முத்தொளி**

தில்லையம்பதி. 5ஆம் திருவிழா உபயகாரர்

(66014)

## ராஜன்ஸ் சைக்கிள் வேக்ஸ்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

**சைக்கிள், ரேடியோ, மணிக்கூடு வகைகள்**
**தொலைக் காட்சிப் பெட்டிகள்**
தவணை முறையில் வாங்க விரும்புவோர்
தொடர்பு கொள்ளவும்.

**ராஜன்ஸ் சைக்கிள் வேக்ஸ்**
பருத்தித்துறை

(சி/7645)

## புதிதாக வந்து விற்பனையாகின்றன

சைவ சமயதீபம் ஆண்டு 4, 5, 6 குவியின் தமிழ் மொழியும் இலக்கியமும் ஆண்டு 6, 9 கணிதம், ஆண்டு 1, 6, 9 சுற்றாடற் கல்வி ஆண்டு 6, சுகாதாரக் கல்வி ஆண்டு 6. 9 நீதி நூல் கொத்து CHAPMAN GRAMMAR BOOK I, II, III, IV. ENGLISH with A SMILE. BOOK I, II, III, LIFCO DICTIONARIES. SAMALL, LARGE. GREAT. கடல்புறா பாகம் I, II, III. மற்றும் இந்தியக் கதைப் புத்தகங்கள். சஞ்சிகைகள் விற்பனையாகின்றன.

**ஆசீர்வாதம்**
**பொத்தகசாலை,**
சாவகச்சேரி. [66018]

கட்டைவேலி - நெல்லியடி
**ப. நோ. கூ. சங்கம்**
(வ-து)

## கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை

| | | | |
|---|---|---|---|
| 1) | 50 கிலோ அரிசிச் சாக்கு | — 2290 | தனி |
| 2) | 67 கிலோ நவதானியச் சாக்கு | — 33 | ,, |
| 3) | ஏனைய கழிவுச் சாக்கு | — 251 | ,, |
| 4) | 50 கிலோ மா உரப்பை | — 5770 | ,, |
| 5) | ஏனைய உரப்பை | — 8565 | ,, |

ஆகியன கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு. மீளப்பெறமுடியாத வைப்புப்பணமாக ரூபா 150-00 ஐச் செலுத்திக் கேள்விப் பத்திரத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி 26 - 05 - 99 நண்பகல் 12-00 மணிக்கு முன் பொதுமுகாமையாளர் கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி என முகவரி இட்டு தபால் உறையில் கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

- பொது முகாமையாளர்

(சி/7599)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரை தமிழர்கள் திட்டமிட்ட குடியேற்றம்

## 'வீரவிதான' கூட்டத்தில் உரை

கொழும்பு, மே 24

கொழும்பில் இருந்து கட்டுநாயக்க வரை 4 லட்சம் தமிழர்கள் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டுள்ளனர். மூன்றாவது கட்ட யுத்தம் கொழும்பில் இருந்தே ஆரம்பமாக இருக்கிறது.

வீரவிதான இயக்கத்தின் பேச்சாளர் தம்மிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை சிங்கள தீவிரவாத அமைப்பான 'வீரவிதான' ஊர்வலம் ஒன்றைக் கொழும்பில் நடத்தியது.

ஊர்வலத்தின் இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போதே தம்மிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு கலாபவனத்தின் முன் ஆரம்பமான இந்த ஊர்வலம் ரவுன்ஹோல், லிப்ரன் சதுக்கம் ஊடாக விஹாரமாதேவி பூங்காவை அடைந்தது அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய தம்மிக்க ரணவக்க தெரிவித்ததாவது.

தமிழ் விஸ்தரிப்பு வாதிகளின் நோக்கம் வடக்கு கிழக்கில் தனித் தமிழ் ஈழத்தை அமைப்பதல்ல; முழு இலங்கையையும் திராவிட நாடாக மாற்றுவதே அவர்களின் நோக்கம்.

கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலிருந்து சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் வெளியேற்ற திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

4 இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் திட்டமிட்ட வகையில் குடியேறி உள்ளனர்.

சமாதானக் கோஷம் எழுப்பும் 'மாபியா' புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு மீண்டும் வலியுறுத்துகின்றது. இதற்கு அரசின் ஆதரவு இருப்பதாகத் தோன்றுகின்றது.

வர்த்தகர்கள் சமாதானப் பேச்சை மேற்கொள்ளுமாறு கோரியதும் உதவி அளிக்க முன்வந்ததும் அரசின் உயர்மட்ட ஆதரவுடனேயே ஆகும். இந்த நிலைமை நீடித்தால் அடுத்த பிரதமர் தொண்டமானாக தான் இருப்பார். இது சிங்கள நாடு என்பதைத் தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஓகஸ்ட்டுக்கு முன் பேரணியொன்றை எமது அமைப்பு உருவாக்கும் தமிழர்களுடன் எந்தவிதப் பொருளாதார நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று பேரணி வலியுறுத்தும்.

கடந்த 20 ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்ட அரசியல் தலைவர்கள் தமிழ் விஸ்தரிப்புவாதிகளின் நோக்கத்தை மறந்து கட்சி அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

இந்த அரசாங்கம் வந்த பின்பே இராணுவத்தில் பலர் இறந்துள்ளனர். கொழும்பில் இருந்து கட்டுநாயக்கா வரை தமிழர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர் அவர்களை வைத்தே பிரபாகரன் யுத்தத்தை நடத்த யோசிக்கின்றார். மூன்றாம் கட்ட யுத்தம் கொழும்பிலிருந்தே ஆரம்பமாகவுள்ளது. மின் மாற்றிகள் மற்றும் குண்டுகள் வெடிப்பது இதன் ஆரம்பமே.

வெளிநாட்டு சக்திகளைத் தலையிடுமாறு தமிழ் இனவாதிகள் அழைப்பு விடுக்கின்றனர். ஆனால் இது முற்று முழுதாக உள்நாட்டு விடயம்

தங்களின் கிறிஸ்தவ அடிப்படைவாதச் சமூகங்களின் ஊடாக மேற்கு மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகள் இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுக்க முற்படுகின்றன.

இந்த விடயத்தில் தலையிட்ட இந்தியா தனது கைகளைச் சுட்டுக்கொண்டது. அங்குள்ள சில கட்சிகள் புலிகளின் பயங்கரவாதத்துக்குத் துணைபோவதாலேயே இந்திய மத்திய அரசு வீழ்ச்சி கண்டது.

தமிழ் இயக்கங்களுக்கு அரசாங்கங்கள் ஊதியம் வழங்கி வருகின்றன ஆயுதங்களையும் கொடுத்து உலாவவிட்டுள்ளன.

அவற்றின் அட்டகாசம் கொழும்பில் தலை தூக்கியுள்ளது. பாதாள உலகக் கோஷ்டி போன்றே இயக்கங்கள் செயற்படுகின்றன. இவ்வாறு இயக்கங்களுக்குச் சுதந்திரம் கொடுக்கப்படுகையில் தமிழர்கள் நசுக்கப்படுவதாக வெளிநாடுகளில் பிரசாரம் செய்யப்படுகின்றது.

இப்படி அவர் தெரிவித்தார்.

தேசிய பிக்குமார் சபை செயலாளர் அ. குரலியே ரட்ணதேரர் தெரிவித்ததாவது:-

வடக்கு — கிழக்கையும் மலைநாட்டையும் பிடித்துள்ள தமிழ் இனவாதிகள் முழுநாட்டையும் கைப்பற்றத் தயாராகின்றனர்;

கொலைகார புலிகள் இயக்கத்துடன் இதற்குமுன்பு பேச்சுக்கள் நடந்திருந்தாலும் இனிமேல் பேச்சு நடத்த எமது அமைப்பு இடங் கொடாது.

சில பிக்குமார்கள் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராகின்றனர். ஆனால் கொலைகாரர்களுடன் பேச்சு நடத்துவதை நாம் விரும்பவில்லை என்றார் (இ-6)

## மூளை மலேரியா மரணம்

தென்மராட்சி, மே 24

மூளை மலேரியாக் காய்ச்சலுக்கு மீசாலைப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் பலியானார்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இவர் தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றதாகவும் காய்ச்சல் அதிகரித்து சுயநினைவு இழந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் சுயநினைவு திரும்பாத நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு அங்கு மரணமடைந்தார்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த விஸ்வலிங்கம் பொன்னம்மா [வயது 54] என்னும் ஆசிரியையே மரணமானவராவார்.

கடந்த மாதம் [ஏப்ரல்] மீசாலையில் மூளை மலேரியாக் காய்ச்சலுக்கு ஆறு வயதுச் சிறுமி பலியானது தெரிந்ததே.

[ஐ-117]

## சீடா உதவி திட்டத்தின் கீழ் உழவு இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், மே 24

'சீடா' உதவித்திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் கொழும்பிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு—சுழற்சி முறைக் கடனடிப்படையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருவதாக யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார்.

மேலும் ஒரு தொகுதியினருக்கான இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் அடுத்த மாதம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஷப்றா நிதி நிறுவன வைப்பீட்டாளர்களுக்கு ஒரு தொகை மீளளிப்பு

### தபால் மூலமும் பெறலாம்

யாழ்ப்பாணம், மே 24

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் நிதி நிறுவனத்தில் பணத்தை வைப்புச் செய்தவர்களுக்கு—

அவர்களின் வைப்புத் தொகையில் மீதியாக உள்ள பணத்தின் பத்துச் சதவீதம் இப்போது மீளளிப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

கொழும்பு இல 21/9 பொல்கென்கொட கார்டின்ஸ் (Shabra Unico Finance Ltd;. 21/9. Polhengoda gardens Colombo - 5.) என்ற விலாசத்தில் உள்ள நிதிநிறுவன அலுவலகத்துக்கு நேரில் சென்று வைப்புச் சான்றிதழையும் ஏனைய அடையாள ஆவணங்களையும் சமர்ப்பித்து மீளளிப்புத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

நேரில் செல்லமுடியாதவர்கள் தமது வைப்புச் சான்றிதழை சுய விலாசமிடப்பட்ட தபாலுறையுடன் பதிவுத் தபாலில் மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிக் காசோலையைப் பெற்றுக்கொள்ளலாம்

நேரில் செல்ல முடியாதவர்கள் வைப்புச் சான்றிதழை அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு ஒருவர் மூலம் அலுவலகத்தில் ஒப்படைத்தும் மீளளிப்புத் தொகைக்கான காசோலையைப் பெற்றுக் கொள்ளலாம்.

குடாநாட்டில் உள்ள வைப்பீட்டாளர்கள் வேறு ஒருவர் மூலம் காசோலையைப் பெறுவதற்கு வசதி இல்லையெனில் கால தாமதம் செய்யாது தபாலில் அனுப்பி காசோலையைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது (அ)

## இந்திய திருத்தலங்களுக்கு யாத்திரை செல்ல ஏற்பாடு

கொழும்புத்துறை, மே 24

இந்தியாவுக்கான பயண அனுமதிக் கட்டுப்பாடு மற்றும் யுத்தச் சூழ்நிலை காரணமாக நீண்ட காலமாக வடபகுதி மக்கள் இந்தியத் திருத்தலங்களுக்கு ஆத்மீக திருத்தல யாத்திரைகளுக்காகச் செல்வது பாதிக்கப்பட்டிருந்தது: இக்குறையை இயலுமானளவு நிவர்த்தி செய்யும் வகையில் வட பிராந்திய இந்துப்பேரவை இந்தியத் திருத்தலங்களுக்கு அடியார்களை அழைத்துச் செல்லும் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது.

இதன்படி வட பிராந்திய இந்துப் பேரவையின் நிர்வாகச் செயலாளர் என். நவரத்தினம் இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றார். இந்தியத் திருத்தலங்களுக்குச் செல்லும் வடபகுதி யாத்திரிகர்கள் குழுவொன்று இம்மாத இறுதிப் பகுதியில் இந்தியாவுக்குப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. இதன் நிமித்தம் அவர்கள் கடந்த வாரம் கொழும்பு சென்றுள்ளனர்.

அடுத்த இந்தியத் திருத்தல யாத்திரையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் திருவாதிரைக் காலத்தில்மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்து விசா மற்றும் பிரச்சினைகள் காரணமாக மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே அடியார்கள் இந்தியத் திருத்தல யாத்திரை மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என வட பிராந்திய இந்துப் பேரவையின் பொதுச் செயலாளர் [illegible] லோகநாதன் தெரிவித்துள்ளார்.

(ஐ—30)

## மரம் தறிப்பது, எடுத்துச் செல்வது: வலி. மேற்கில் கடும் கட்டுப்பாடு

வலிகாமம் மேற்கில் மரங்கள் தறித்தல் மற்றும் மரங்களை எடுத்துச் செல்லல் ஆகிய விடயங்களில் பாதுகாப்பு படையினர் கடுமையான கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இப்பகுதிகளில் காணப்படும் பயன்தரும் மரங்கள் மற்றும் விறகுக்கான மரங்கள் எதுவாக இருந்தாலும் அவற்றைத் தறிப்பதாயின் உரிய முறையில் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பாதுகாப்புப் படையினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் செய்துள்ளனர்.

உரிய முறையில் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் மரங்களைத் தறிப்பதோ அல்லது தறித்த மரங்களை எடுத்துச் செல்வதோ கண்டு பிடிக்கப்பட்டால்கடுமையான தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும் என்று பாதுகாப்புப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக இப்பகுதி கிராம உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ-99)

## தீவுப்பகுதி ஆசிரியர் இடமாற்றம் ஆசிரியர் சங்க யாழ். கிளை போராட்டம் நடத்த முஸ்தீபு

யாழ்ப்பாணம், மே 24

தீவுப்பகுதி ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப் படாததைக் கண்டித்துப் போராட்டத்தில் குதிக்க இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளை முஸ்தீபு செய்து வருகின்றது.

மேற்படி சங்கத்தின் கூட்டம் நேற்று நடைபெற்ற சமயம் இது தொடர்பாக ஆராயப்பட்டது.

தீவுப்பகுதி ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தை கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஏற்றுக் கொண்ட போதும், அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்று கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப் பட்டது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படும் தாமதத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கநடவடிக்கையை விரைவில் ஆரம்பிப்பது என்று கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு முன்னோடியாகத் தீவுப்பகுதியில் மாவட்ட மட்டத்தில் நடைபெறும் தமிழ், ஆங்கில தினப் போட்டிகளைப் பகிஷ்கரிப்பது என்றும் —

சீடா நிறுவனத்தால் நடத்தப்படும் விசேட வகுப்புகளை பகிஷ்கரிப்பது என்றும் — முடிவு செய்யப்பட்டது

அதேநேரம் — ஊர்காவற்றுறையில் நாளை நடைபெறும் தமிழ்த் தினப் போட்டிகளில் கலந்து கொள்வது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-3-111)

## வன்னிக்கு கூடுதல் உணவுப் பொருள்கள் அனுப்புமாறு அரச அதிபர்கள் கோரிக்கை

வவுனியா, மே 24

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கு கூடுதலான உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப்பொருள்கள் ஆகியவற்றை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு வன்னி அரச அதிபர்கள் அரசாங்கத்தையும், செஞ்சிலுவைச் சங்கத்தையும் கேட்டுள்ளனர்.

தற்சமயம் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களிலேயே உணவு மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்லும்லொறிகள் செல்கின்றன. இந்த நாள்களை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று அரச அதிபர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன் பொருள் ஏற்றிச் செல்லும் உணவுலொறிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பாடசாலைகள் அணி வவுனியாவிடம் தோல்வி

மட்டக்களப்பு, மே 24

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடந்த ஆட்டத்தில் யாழ். மாவட்ட பாடசாலைகள் அணியை வவுனியா மாவட்ட அணி 3 விக்கெட்டுக்களால் வென்றது.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடந்த மேற்படி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 27 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் யாழ். அணி வீரர்களான ஏ. தினேஷ் எபநேசன் 50 பந்துகளில் 45 ஓட்டங்களையும் சைலேஸ்வரன் 29 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பிரகாசன் 27 பந்துகளில் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

வவுனியா அணியைச் சேர்ந்த ரமணன் 36 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களையும் ஞானகுமார் 18 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய வவுனியா அணி 32 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்று வென்றது.

இதில் வவுனியா வீரர் ராஜன் 67 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ். அணியைச் சேர்ந்த பார்த்தீபன் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சைலேஸ்வரன் 14 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் யாழ். அணி மட்டக்களப்பு அணியுடன் மோதவுள்ளது.

(இ-3)

# திருத்தப்படாத நிலையில் அல்வாய், காந்தியூர் வீதி

யாழ்ப்பாணம், மே 24

வீதி திருத்துவதற்கென கல் பறிக்கப்பட்டு ஒன்றரை வருடங்களாகியும் இன்னும் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படாத நிலையில் அல்வாய், காந்தியூர் வீதி காணப்படுகிறது.

அல்வாய் தெருமூடிமடம் பிரதான வீதியையும் தம்பசிட்டி வீதியையும் இணைக்கும் சுமார் ஒன்றரை மைல் நீளமான இந்த வீதி கடந்த 15 வருடங்களுக்கு மேலாக பழுதடைந்து குண்டும் குழியுமாக போக்குவரத்துக்கு உதவாத நிலையில் சேதமடைந்துள்ளது.

அந்தக் கிராமத்தின் மத்தியிலுள்ள ஒரு பிரதான வீதியான இந்த வீதியை திருத்துவதற்கென ஒன்றரை வருடத்துக்கு முன் வீதியின் இரு மருங்கிலும் கற்கள் பறிக்கப்பட்டிருந்தன.

தற்போது அந்தக் கற்களும் சிதறுண்டு போக்குவரத்துக்கு மேலும் ஒருபடி சிரமத்தை அதிகரித்துள்ளது.

ஒருதடவை பறித்த கற்கள் திருப்பி அள்ளப்பட்டு பின் மறுதடவை பறிக்கப்பட்ட கற்களே தற்போது சிதறுண்ட நிலையில் காணப்படுகின்றன.

(இ-15)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

வலகத்துக்குச் சமுகமளிக்க வேண்டும் என்றும் — கோரப்பட்டுள்ளது.

இராணுவ அனுமதி பெற்றவர்கள் பயண ஏற்பாடுகளுடன் சமுகம் தந்தால் ரிக்கெட் வழங்கப்பட்டு காங்கேசனுக்கு அழைத்துச் செல்லப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

((இ-3)

## வன்னிக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

களை எடுத்துச் செல்ல அந்தச் சங்கம் வவுனியா அரச அதிபருக்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களிலேயே உணவு லொறிகள் தற்சமயம் அங்கு செல்வது குறிப்பிடத்தக்கது.

(இ- 164-3)

## மேஜர் ஜெனரல்...

[முதலாம் பக்கத் தொடர்]

''போர்க்கோஷம் III'' நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து ஆராயப்பட்டது என்றும் —

மறுநாள் வீரசூரியா பாங்ஹொக் சென்றார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டம் பதில் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தலைமையில் நடந்தது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3)


# காயத்திரி

## நகைத் தொழிலகம் & வீடியோ விஷன்

காலம்:- 24 - 05 - 1999 இன்று திங்கட்கிழமை

நண்பகல் 12. 00 மணி முதல் 1. 22 மணி வரை உள்ள உத்தர லக்கன சுப முகூர்த்தம்

இடம்:- 637, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி.

ஆரம்பித்து வைப்பவர்:-

திருமதி சிவராஜ பரமேஸ்வரி அம்மன்

இந்த இரு நிறுவன ஆரம்ப வைபவங்களில் அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்.

செ. திருநாவுக்கரசுப் பத்தரும் புதல்வன் முரளிதரனும்

(66024)



# யாழ்ப்பாணம்

300 நாடகங்களும் 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர்

## ந. சுந்தரம்பிள்ளையின்

10 சிறு கதைகளும் சிறுகதை இலக்கியத்தின் சிறப்பை விளக்கும் ஒரு கட்டுரையும்.

110 பக்கங்கள் விலை ரூபா 50. 00 மட்டுமே!

(65996)


# கலாசார உத்தியோகத்தர்

வலிகாமம் தெற்கு, மே 24

வலிகாமம் கல்வி வலயத்தில் கடமையாற்றவெனக் கலாசார உத்தியோகத்தர் நியமிக்கப்பட உள்ளனர்.

நிரந்தர ஆசிரிய சேவையில் அனுபவம், ஆற்றல் மிக்க ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் தமது சுய விவரங்களைக் குறித்து வலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-152)

# பாடப் புத்தகம் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான முதலாம், ஆறாம், ஒன்பதாம் ஆண்டுப் பாடப் புத்தகங்கள் இன்று காலை 9 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைத்து விநியோகிக்கப்படவிருக்கின்றன.

பாடசாலை அதிபர்கள் சமுகம் தந்து தமது பாடசாலைக்குரிய புத்தகங்களைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இ-3

# கால்நடை வளர்ப்போர் கூ. சங்கம்

வலி. கிழக்கு, மே 24

நீர்வேலியில் இதுவரை இயங்கி வந்த கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைச் சங்கம் கோப்பாய் பூதர்மடத்தடியில் பிரதான வீதியில் தனியார் வீடு ஒன்றுக்கு இடமாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

(இ-180)

## கதிர்காமரின்...

[முதலாம் பக்கத் தொடர்]

கள் தெரிவித்தன.

வியட்நாம், தென்கொரியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கே அமைச்சர் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தென்கிழக்காசிய நாடுகளை மையமாக வைத்து விடுதலைப் புலிகள் தமது ஆயுதக் கொள்வனவு மற்றும் போக்குவரத்துக்களை நடத்துவதால், அவற்றைத் தடுக்கும் வகையில் அந்த நாடுகளுடன் பேச்சுக்கள் நடத்த அமைச்சர் விஜயம் மேற்கொள்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3 ரீ)

## இனப்பிரச்சினைத்...

[முதலாம் பக்கத் தொடர்]

பேச்சுநடத்தும்போது ஆயர் மல்கம் ரஞ்சித் இதனை எடுத்துக் கூறுவார் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்த வேண்டும் என்ற விருப்பம் அரசுக்கு இருக்குமானால் அதன் அறிகுறியாக அண்மையில் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் என்றும் தெரியவந்தது.

ஜனாதிபதியை இன்று சந்திக்கும் ஆயர் மடுவில் இருந்து படை விலகல் உட்படப் பல விடயங்கள் குறித்துப் பேசுவார்.

[இ-164-3]

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்தார்.

நாட்டுக்காகத் தியாகம் செய்யும் படைவீரர்களின் நலன்களை கவனிக்கப் வேண்டியது அரசாங்கத்தின் கடமை ஆகும். அந்தக் கடமையை நிறைவேற்ற அவர்களின் சேமநலன்களைப் பாதுகாக்க தனியான அமைப்பு ஒன்றை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கான சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இப்படி அவர்மேலும் தெரிவித்தார்.

(இ-3-ரீ)

# பாடசாலை பஸ் சேவை நடத்துமாறு கோரிக்கை

தென்மராட்சி, மே 24

சாவகச்சேரியில் உள்ள கல்லூரிகளில் கல்வி பயிலும் எழுதுமட்டுவாள் தொடக்கம் பளை வரையான பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கென பளையிலிருந்து சாவகச்சேரி வரை பாடசாலை பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியாகிய ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இப்பகுதியில் இருந்து சாவகச்சேரி நகரில் உள்ள பாடசாலைகளில் அனுமதி பெற்றுள்ளனர் என்றும் —

இவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு உரிய நேரத்தில் பஸ் சேவை இல்லாததால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் —

தினமும் காலை 7.30 மணிக்குப் பளை பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பஸ்ஸில் பெருமளவு பொதுமக்கள் பயணம் செய்வதால் மாணவர்கள் கஷ்டத்தின் மத்தியிலேயே பயணம் செய்கின்றனர் என்றும் —

சோதனைச் சாவடிகளில் பஸ் மணிக்கணக்கில் தரித்து நிற்பதால் மாணவர்கள் உரிய நேரத்தில் பாடசாலைக்கு செல்ல முடிவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

# நேற்றைய ஆட்டங்களில் இந்தியா -- பாக். வெற்றி

லண்டன். மே 24

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடந்த ஆட்டங்களில் இந்தியாவும், பாகிஸ்தானும் வெற்றிபெற்றன.

இந்தியாவுக்கும் கென்யாவுக்கும் இடையில் நடந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் இரு விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 329 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 140 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து ஆடிய கென்யா அணி 50 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது.

ஆஸ்திரேலியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் பாகிஸ்தான் 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

## பம்பலப்பிட்டிக் கொலைகள்:

# முழுப் பொறுப்பையும் புளொட் ஏற்க வேண்டும்

## ரெலோ வற்புறுத்துகிறது

மட்டக்களப்பு, மே 24

''கொழும்பு பம்பலப்பிட்டியில் ரெலோ மத்திய குழு உறுப்பினர்கள் இருவரின் படுகொலைச் சம்பவத்துக்கான முழுப் பொறுப்பையும் புளொட் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

இப்படி ரெலோ மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்தக் கொலைகளுக்கு விடுதலைப் புலிகள் தான் பொறுப்பு அல்லது ரெலோவின் உட்பூசல்கள் காரணமாக இருக்கலாம் என்று புளொட் அமைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ரெலோ முற்றாக நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக ரெலோ செயலாளர் நாயகம் எஸ். வினோதலிங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

★ படுகொலை செய்யப்பட்ட வவுனியா மாவட்ட ரெலோ பொறுப்பாளர் குகனுக்கு புளொட் தரப்பில் இருந்து வெளியான மரண அச்சுறுத்தல்களை பொது மக்கள் மட்டுமன்றி சகல தரப்பினரும் அறிந்திருந்தார்கள். 1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வவுனியாவில் புளொட் மேற்கொண்ட தாக்குதல் கொலை முயற்சி ஒன்றில் இருந்தும் இவர் உயிர் தப்பியிருந்தார்.

★ இந்த வருடம் பெப்ரவரி மாதம் புளொட் வவுனியாவில் மேற்கொண்ட மற்றுமோர் தாக்குதலில் நிதிச் செயலாளர் கேதீஸ்வரன் உட்பட மூன்று ரெலோ உறுப்பினர்கள் பலியானார்கள்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் ரெலோவின் அண்மைக்கால வளர்ச்சி ரெலோவுக்கு உள்ள மக்கள் ஆதரவு இவற்றைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாத நிலையில் புளொட் திட்டமிட்டு இந்த இரு படுகொலைகளையும் செய்துள்ளது.

இதில் சந்தேகம் இல்லை; இந்த கொலைகளின் சூத்திரதாரிகள் விரைவில் அடையாளம் காணப்படுவார்கள்.

இதுபற்றி பொலீஸாரின் விசாரணைகள் தொடர்வதால் மேலதிக தகவல் எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-21)

# திருத்தப்படாத தபாற்பெட்டி

சுழிபுரம் தபாற் கந்தோருக்கு முன்பாக பல வருடங்களாகத் திறந்தபடி கிடக்கும் தபாற்பெட்டி திருத்தப்படுமா? என இந்தப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

சுழிபுரம் தபாற் கந்தோருக்கு முன்பாக பிரதான வீதியிலுள்ள இந்தத் தபாற்பெட்டி பல வருடங்களாகத் திறந்தபடியே கிடக்கின்றது. இந்தத் தபாற்பெட்டியைத் திருத்துவதற்குத் தபாற் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

(இ-175)

# விதைநெல்

வலிகாமம் மேற்குப் பகுதியில் இந்த ஆண்டுக்கான பெரும்போக நெற் செய்கைக்குத் தேவையான விதை நெல்லை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியின் மண் தன்மைக்கு ஏற்றதும் குறுகிய கால வயதுடைய அதிக விளைவு தரக்கூடிய விதை நெல்லைக் கப்பல் மூலம் தருவித்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விதை நெல் தேவையானவர்கள் தமது பகுதி விவசாய சம்மேளனங்கள் மூலமாக விண்ணப்பம் செய்து வருகின்றனர்.

விண்ணப்பம் செய்து முற்பணம் செலுத்தும் விவசாயிகளுக்குக் கப்பல் மூலமாக எடுத்து வரப்படும் விதைநெல் விநியோகம் செய்யப்படவுள்ளது.

(இ-99)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org